விலை ரூபா 20 பக்கங்கள் 24

# உதயன்

சுடர் 31 கதிர் 051 வள்ளுவர் ஆண்டு 2047 தை 02, சனிக்கிழமை 16.01.2016




## 'உதயனுக்கு' அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16
பலாலியில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வு தொடர்பான செய்தி சேகரிப்புக்கு 'உதயனுக்கு' நேற்று அனுமதி மறுக்கப்பட்டது.
ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலில், 'உதயன்' ஊடகவியலாளர்களின் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை என்று தெரிவித்து, ஜனாதிபதி பக். 22

# காணாமற்போனோர் உயிருடன் இல்லை

## யாழ். வந்த ரணிலின் பொங்கல் செய்தி இதுதான்



யாழ்ப்பாணம், ஜனவரி 16
காணாமற்போனவர்களில் பெருமளவானோர் உயிரிழந்து போனவர்களாகவே கருதப்படுகின்றனர். இதனை நான் இங்கு கவலையுடன் தெரிவிக்கின்றேன்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
தேசிய தைப்பொங்கல் விழாவின் பிரதான நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பக். 22

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 16
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஒரு சில மாகாண சபை உறுப்பினர்கள் மாத்திரமே நேற்று இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கெடுத்தனர். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, வடக்கு மாகாண அமைச்சர்கள், அவைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களோ நேற்றைய நிகழ்வில் பங்கெடுக்க பக். 20

## ஆட்சி மாறிய பின்னர் இலங்கையில் மாற்றம்

### யாழில் கூறினார் ஹுயூகோ ஸுவைர்



யாழ்ப்பாணம், ஜன. 16
ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுயூகோ ஸுவைர், யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித் தார்.
தேசிய பொங்கல் விழாவில் நேற்றுப் பங்கெடுத்து உரையாற்று பக். 22

முச்சந்தி முரளி



தை பிறந்தால் வழி பிறக்கும் எண்டது இதைத்தானோ...

## மைத்திரியுடன் வந்தார் ரணில்

யாழ்ப்பாணம், ஜன. 16
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இடம்பெற்ற தேசிய தைப் பொங்கல் விழாவுக்கு தனது பாரியார் மைத்திரியையும் அழைத்து வந்திருந்தார்.
தேசிய பக். 22

## பொங்கல் விழாவுக்கு வரவில்லை ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஜன. 16
தேசிய தைப்பொங்கல் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கெடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர் நேற்றைய தினம் திடீரென வருகை தரவில்லை.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தேசிய தைப் பொங்கல் விழா நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பக். 20

## முடிவுக்கு வந்தது ஊடல்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வர னுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வந்த மோதல் நேற்றுடன் முடிவுக்கு வந்தது. யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த தேசியப் பொங்கல் விழாவில் இருவரும் அருகருகே அமர்ந்து அளவளாவினர். இதற்கு முன்னர் இருவரும் ஒருவரை ஒருவர் பகிரங்கமாக விமர்சித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (விரிவு 02 ஆம் பக்கம்)

## போர்க்குற்றப் பாதிப்புக்கு நீதி கிடைக்குமா என்பதில் மயக்கம்

### வடக்கு முதல்வர் கூறினார்



யாழ்ப்பாணம், ஜன. 16
எவ்வாறான அரசியல் மாற்றம் நடைபெறும், எவ்வாறான தீர்வு எமக்குக் கிடைக்கும், போர்க் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவார்களா என்பதில் எமக்கு மயக்க நிலையே இருந்து வருகின்றது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
எமது வடக்கு பக். 22

## காணிகளை விடுவிக்குமாறு ராணுவத் தளபதிக்கு பணிப்பு

### பலாலியில் வைத்து விடுத்தார் பிரதமர்

யாழ்ப்பாணம், ஜன. 16
பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றின் அபிவிருத்திக்குத் தேவையான காணிகள் மற்றும் இராணுவத்தினரின் ஆகக் குறைந்த பாதுகாப்புக்குத் தேவையான காணிகள் தவிர்ந்த ஏனைய காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இராணுவத் தளபதி உள்ளிட்டோருக்குப் பணிப்புரை பக். 22

## காலாவதியாகிவிட்டது பயங்கரவாதச் சட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 16
நாட்டில் தற்போது பயங்கரவாதம் – தீவிரவாதம் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் காலாவதியாகிவிட்ட ஒன்றாகும். அதனை நீக்கி, பிரிட்டனில் உள்ளது போன்ற சட்டம் ஒன்று இந்த ஆண்டு நடுப்பகுதியில் உருவாக்கப்படும்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரம பக். 20

மேலும் செய்திகள், படங்கள்

## எங்கள் காணிகளை விடுவியுங்கள் ரணிலிடம் நேரில் கோரினர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 16
எங்கள் காணிகளை விடுவியுங்கள் என்று பொங்கல் விழாவில் பங்கெடுத்த மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோஷம் எழுப்பிக் கோரிக்கை விடுத்தனர்.
உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை விசேட தைப்பொங்கல் வழிபாடு இடம்பெற்றது. இதில் ஆயிரத்து 500 பேர் பக். 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# போர்ச்சூழலை நினைவூட்டிய தேசிய தைப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 16
போர்ச் சூழலின்போது வீதிகள் தோறும் படையினர் குவிக்கப்பட்டிருப்பதைப் போன்று நேற்றைய தினம் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் பலாலி வீதி முழுவதும் குவிக்கப்பட்டிருந்தனர்.



தேசிய தைப் பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பங்கெடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுயூகோ ஸுவைர் ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால மாத்திரம் வருகை தரவில்லை. இந்த நிலையில், பலாலி வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வசாவிளான் சந்தி வரையில் பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் வீதியின் இருமருங்கிலும் குவிக்கப்பட்டிருந்தனர். பலாலி பிரதான வீதியின் உப வீதிகளிலும் இவர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன் பலாலி வீதியில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. கடந்த போர்க் காலத்தில் குடாநாடு இருந்த சூழலை இது நினைவுபடுத்தியது.
(த-5-21-106)

# ஆனையிறவில் ரயில் மோதி இராணுவப் பொலிஸ் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழில் இருந்து கொழும்புக்கு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு இராணுவப் பொலிஸ் சிப்பாய் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். ஆனையிறவுப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கட்டைக்காடு பகுதியில் உள்ள 55 ஆவது படைப்பிரிவில் கடமையாற்றும் நந்தசூரிய என்ற இராணுவ பொலிஸ் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவத்தில் இராணுவ பொலிஸ் சிப்பாயின் தலை சிதறிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். சடலம் தொடர்பான விசாரணையைபளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(த-106)

# தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் பொறுமையில்லாது அவசரம்

*பிரதமர் ரணில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 16
ஆட்சி மாற்றத்தின் பின்னர், அரசியல் தீர்வுக்கும் சரி - அபிவிருத்திக்கும் சரி பொறுமையில்லாமல் அவசரப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தைப்பொங்கல் நிகழ்வானது தனிய ஒரு இனத்துக்கு - மதத்துக்கு - பிரதேசத்துக்குரிய நிகழ்வு அல்ல. ஒட்டுமொத்த நாட்டுக்கும் உரியது. தென்பகுதியில் தரும் பால்சோறை விட வடபகுதியில் நீங்கள் தரும் பொங்கல் நல்லாக இருக்கின்றது. இதனை நான் சொன்னால் தென்பகுதியில் என்னை எதிர்ப்பார்கள்.

இப்போது நாட்டின் எல்லாப் பகுதிக்கும் சூரிய ஒளி கிடைக் கின்றது. கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரே இந்தச் சூரிய ஒளி சகல இடங்களுக்கும் கிடைக்கின்றது. இந்தச் சூரிய ஒளியைக் கண்டதும், பொறுமையில்லாமல் அவசரப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அரசியல் தீர்வாகட்டும் அபிவிருத்தியாகட்டும் எல்லாவற்றிலும் அவசரம் காண்பிக்கின்றனர். வடக்கு - கிழக்கு மக்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களின் பிரச்சினையைக் கலந்துரையாடித் தீர்க்கலாம். இந்தப் பிரச்சினை இழுபட்டுச் செல்வதை இனியும் அனுமதிக்க முடியாது.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இங்கு உரையாற்றும்போது, வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சிங்களத்தில் மாத்திரம் கடிதம் அனுப்பியதாகத் தெரிவித்தார். அரசமைப்பின் பிரகாரம் அது தவறான செயல். நாட்டில் மொழிபெயர்ப்பாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால்தான் இந்தப் பிரச்சினை.

விரைவில் மொழிபெயர்ப்பாளர்களை நாம் இணைத்துக்கொள்ளவுள்ளோம். இனிமேல் இவ்வாறு நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.
(த-5-21-106)

# பொன்னாடை போர்த்தி தலைப்பாகை வைத்து ரணிலை வரவேற்ற விக்கி

## *நேற்றுடன் முடிவுக்கு வந்தது ஊடல்*

யாழ்ப்பாணம், ஜன. 16
தேசிய தைப்பொங்கல் விழாவுக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பொன்னாடை போர்த்தி, தலைப்பாகை வைத்து வரவேற்றார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாரியார் சகிதம் வருகைதந்தார். இதன் போது இவர்க்ளை ஆரத்தி எடுத்து வரவேற்பளிக்கப்பட்டது.

அதன் பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பொன்னாடை போர்த்தினார். தொடர்ந்து, தலைப்பாகையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதலமைச்சரால் வைக்கப்பட்டது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் வடக்கு மாகாண சபையின் அமர்வில் வடக்கு முதலமைச்சர் இனஅழிப்பு தொடர்பான பிரேரணை கொண்டு வந்திருந்தார். இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பொய்யர் என்று பிரதமர் ரணில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்ததுடன், இனிமேல் அவருடன் கைலாகு கொடுக்கமாட்டேன் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே வீரசிங்கம் மண்டபத்தில்இருவரும்நேற்று அன்னியோனியமாக இருந்தமைகுறிப்பிடத்தக்கது. (த-5-21)

### டெங்குக் காய்ச்சல் பாதிப்பு அதிகரிப்பு

வருடத்தின் முதல் 15 நாள்களில் 1912 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே ஆகக்கூடியதாக 627 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாகஅமைச்சின்தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 263 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 133 பேரும், கண்டி மாவட்டத்தில் 109 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக்கண்டறிந்து துப்புரவுசெய்வதன்மூலம்நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (வ)

# பாணின் விலை மீண்டும் குறைப்பு

கொழும்பு, ஜன.16
நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 450 கிராம் பாணின் விலை ஒரு ரூபாவினால் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தேச நிர்மாண வரி 2 வீதத் திலிருந்து 4 வீதம் வரை அதிகரிக்கப்பட்டமையால் அனைத்து பேக்கரி உற்பத்திகளின் செலவும் அதிகரித்திருந்ததாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்

இதனடிப்படையில் பாண் இறாத்தலொன்றின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

எனினும் அரசினால் மீண் டும் தேச நிர்மாண வரி குறைக்கப்பட்டமையால்அதன்நன்மையை மக்களுக்கு வழங்க முடிந்துள்ளதாக அவர் கூறினார்.

தமது சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஜயவர்தன குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், பாணின் விலை ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த-வ)

# அரசியல் கைதிகளின் விடுதலை சட்டத்தரணிகளாலேயே தாமதம்

*மீள்குடியேற்ற அமைச்சர் யாழில் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜன. 16
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தாமதமடைவதற்கு அவர்களின் சட்டத்தரணிகளே காரணம் என்று மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் பகிரங்கமாக நேற்றுக் குற்றம் சுமத்தினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற தேசிய தைப் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்று இன்றுடன் (நேற்றுடன்)
[illegible]
[illegible]
வேண்டிய கடமைகளை இயன்றவரை செய்து வருகின்றோம். பலர் நாம் சிறப்பாகச் செயற்படவில்லை என்று குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் நாம் எம்மால் செய்யக் கூடியதைச் செய்து வருகின்றோம் என்பது இங்குள்ள மக்களுக்குத் தெரியும். ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது அரசு பொறுப்பெடுத்ததையடுத்து வடக்கு - கிழக்கில் 3 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்னமும் காணிகளை மக்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நாம் முயற்சிகள் மேற்கொள்கின்றோம். இங்குள்ள குளங்களைப் புனரமைத்து அதனை விவசாயத் தேவைக்கு பயன்படுத்தத்தக்க வகையில் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பலர் பேசி வருகின்றனர். அவர்களை விடுதலை செய்வதில் பல்வேறு இடைஞ்சல்கள் இருக்கின்றன. தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்வளித்து விடுதலை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதனை, தமிழ் அரசியல் கைதிகளின் சட்டத்தரணிகள் குழப்பி வருகின்றனர்.

நீதிமன்றங்களில் வைத்து, தமிழ் அரசியல் கைதிகள் புனர்வாழ்வை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவர்களின் சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர். இதனால் நாம் பல இடைஞ்சல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. விரைவில் அவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் - என்றார். (த-5-21-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு

அந்நிய செலாவணி விகித மாற்றத்தால்

கொழும்பு, ஜன.16
அந்நிய செலாவணி விகிதம் மாற்றமடைவதன் ஊடாக எதிர்காலத்தில் வாகனங்களின் விலை 2 லட்சம் முதல் 3 லட்சம் ரூபாவினால் அதிகரிக்கப்படலாம் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் ஜப்பான் யென்னின் பெறுமதி மாற்றம் என்பன வாகன விலை அதிகரிப்பிற்குக்காரணமாகஅமையுமெனவாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத்மெரிஞ்சிகே குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரித்திருத்தம் காரணமாக வாகனங்களின் விலைபெரியளவில் அதிகரித்தது.

இதனையடுத்து, பெரும்பாலான வாகன இறக்குமதியாளர்கள், வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் நேற்று முன்தினம் வரை, வாகன இறக்குமதிக்கு அல்லது துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள வாகனங்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் வாகனக் கடன்பத்திரக்கணக்குத் திறந்துள்ள அனை வருக்கும் நடைமுறையிலிருந்த தீர்வையின் பிரகாரம் வாகனங்களை விடுவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்ற நம்பிக்கை யின் அடிப்படையில் வாகன இறக்குமதியாளர்கள் வாகனங்களை விடுவிக்க நட வடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

எனினும், நிதியமைச்சினால் கடந்த புதன் கிழமை விடுக்கப்பட்ட பரிந்துரைக்கமைய தனிப்பட்ட தேவைக்கான வாகனங்களை இறக்குமதி செய்தவர்களுக்கே அந்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இறக்குமதி செய் யப்பட்டு கடந்த சில மாதங்களாகதுறைமுகத்தில்நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக மேலதிகக் கட்ட ணத்தை வாகன இறக்குமதியாளர்கள் செலுத்துவதற்கு நேரிட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரிஞ்சிகே கூறியுள்ளார்.

வரவு-செலவுத் திட்ட வரித்திருத்தம் காரணமாக வாகனங்களின் விலைகள் கணிசமாக உயர்வடையும் என்பதுடன், குறிப்பாக இலத்திரனியல் கார் 25 லட்சம் ரூபாவினாலும், வான் சுமார் 30 லட்சம் ரூபாவினாலும் அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (வ)

# சுமந்திரன் எம்.பி. இன்று கனடாவுக்குப் பயணம்

கொழும்பு, ஜன.16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இன்று அதிகாலை கனடாவுக்கான உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். அவர் தனது பயணத்தின்போது கனடா அரச தரப்பு முக்கியஸ்தர்களுடன் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாகவும், ஜெனிவா தீர்மானம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கனடாவின் றொரன்ரோ நகரில் நடைபெறும் தைப்பொங்கல் விழாவொன்றில் பங்கேற்பதற்காகவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். அத்துடன், இந்தப் பயணத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு அவரது அளப்பரிய அரசியல் பங்களிப்பிற்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. வேலைப் பளு காரணமாக அவர் கனடா செல்ல முடியாமையால் சுமந்திரன் இந்த விருதை சம்பந்தன் சார்பில் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்தப் பொங்கல் விழாவில் கனேடிய வெளிவிவகார அமைச்சருடன்மேலும் பல அமைச்சர்களும் முக்கியஸ்தர்களும் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பயணத்தின் போது சுமந்திரன் கனேடிய அரச பிரதிநிதிகளுடன் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாக முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளதுடன், ஜெனிவா தீர்மானம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (த-சி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22
★
09
★
1938

உதிர்வு
16
★
01
★
2015

## திரு.இராசா கந்தசாமி

(பிரபல வர்த்தகர்) பழைய வெங்கடேஸ்வரா வர்த்தக நிலைய உரிமையாளர்
இல.90, பெட்டா டிரேட் சென்ரர், 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
திதி: 04.02.2016

பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருஉருவாய்
எமக்கு நல்வழிகாட்டியாய் வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் பாச நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாதகல்
துரட்டியம்பதி ஸ்ரீ ஆஞ்சநேய பெருமான் சமேதராய்
வீற்றிருக்கும் ஸ்ரீ ஐயப்பன் பாதாரவிந்தங்களில்
நிலையான ஆத்மா நற்சாந்தி பெற
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Tel:076 9424228, 011 232 0543,
077 697 9406.
70/2, 3/2, புதிய செட்டித்தெரு, கொழும்பு-13

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தேவை

யாழ் நகரிற்கு அண்மையாக உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு விற்பனையாளர் (ஆண்)
Bill Clerk (பெண்) தேவை.
078 5210573

## ஏலம்

கம்பியூட்டர் சென்ரரில் பாவித்த கம்பியூட்டர்கள், மேசைகள், தொலைபேசி பெட்டிகள், மற்றும் பழுதடைந்த கணினி பாகங்கள் ஞாயிறு 17.01.2016 அன்று பகல் 10.00 மணிக்கு ஏலம் விடப்படும். தொடர்புகளுக்கு:-
0757601881, 0779900501

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலுக்கு அருகில் 5 அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு காணி வருமானத்துடன் உண்டு.
தொடர்புகளுக்கு: 078 5357 950

## CCTV

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
Next Batch : 22-January-2016
iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
021-4926222,077-3013060

## வாடகைக்கு

நல்லூர்ப்பகுதியில் அனெக்ஸ் (முற்றிலும் தனியானது) தனிஅறை, இணைந்த குளியலறை, சமையலறை
2 பெண்கள் வசிக்கலாம்.
தொடர்புக்கு: 071 4620 806

## British College of Higher Studies

BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாகUK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0770365728,0777585913,0777222422, 0714299935

## Study Medicine

MBBS

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO



* Riga Strands University - Latvia
* International Medical University - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus

Admission Open for the Year 2016
Limited Seats are Available

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B-1/1 Galle Road, Colombo 06
Appointments
077 3013060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான அதிகாரமாற்றம் இடம்பெற்றது இலங்கையில்

*பான் கீ மூன் தெரிவிப்பு*

நியூயோர்க், ஜன.16

கடந்த வருடத்தில் இடம்பெற்ற தேர்தலில், இலங்கையின் ஆட்சி மாற்றம் அமைதியாக இடம்பெற்றதாக ஐ. நா.பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச்சபையின் வருடத்தின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய பான்கீ மூன், இலங்கை தொடர்பில் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- 2016ஆம் ஆண்டு நிலையான அபிவிருத்திக்கான ஆண்டாக அமைய வேண்டும்.

குறிப்பாக, 2015 ஆம் ஆண்டில் இலங்கை, நைஜீரியா ஆகிய நாடுகளின் அதிகார மாற்றங்கள் அமைதியாக இடம்பெற்றன. மியன்மார் மற்றும் டுனிசியாவில் ஜனநாயக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் உலகில் நீடித்து வரும் மோதல்களை நாம் முடிவுக்கு கொண்டுவரமுயல்கின்றோம். பாதிக்கப்பட்டும் மக்களுக்குப்பாதுகாப்புக் கிடைக்கவேண்டும். - என்றார். (த-வ)

---

## உயிர் காக்கும் எண் கணித சோதிடம்

உங்களின், உங்கள் பிள்ளைகளின் பெயர்கள், கையெழுத்து என்பன 13, 16, 17, 20, 26, 28, 29, 35, 38, 44, 53, 62, 71 போன்ற எண்களில் இருந்தால் அதனை உடனடியாக மாற்றியோ, சீரமைத்தோ அவர்களை விபத்து, அகாலமரணம், கொடியநோய், கல்யாணத்தடை, குழந்தையின்மை, பெரும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுங்கள்.

உ+ம் - S.SIVAKUMAR
3. 316126412 = 3+26=29

மேற்சொன்ன எண்ணைக் கொண்டுள்ளவர்களுக்கு ஆயுள் தீர்க்கம், நீடித்த நிலைத்த சந்தோஷம், தேகாரோக்கியம் முதலிய நன்மைகள் கிடைப்பது மிக அரிதே!

பூரண ஆலோசனை பெற நாடுங்கள்

**தொடர்புகளுக்கு :- 077 076 1976**

---

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண் நாயும், 6 மாத ஆண்குட்டியும், பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும் கினிக்கோழி, வான்கோழி, வெள்ளடியன், முயல், மணிதாரா, ஊர்த்தாரா விற்பனைக்குள்ளன .

தொடர்பு: மயூரன் பாம் சென்ரர்,
நீர்வேலி கந்தசாமி கோயில் பின் வீதி.

---

## IELTS UK KU Education

MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A,G&L) IELTS Centre@KU

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1

K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

---

## யாழ் நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி

25

### வெள்ளிவிழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

இடம் : திவ்ய ஜீவன சங்க மண்டபம்
காலம் : 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை
காலை 9மணி

தலைமை
செல்வி சியாமளா சண்முகலிங்கம்
(பொறுப்பாசிரியர்)

முதன்மை விருந்தினர்
கலாநிதி திருமதி ஜெ.இராஜநாயகம்
(முதுநிலை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு க.விமலநாதன்
(முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் - யாழ்வலயம்)

திரு கு.மகிழ்ச்சிகரன்
(வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் - யாழ் இந்துக்கல்லூரி)

கௌரவ விருந்தினர்
திருமதி மா.விவேகானந்தன்
(முன்பள்ளி இணைப்பாளர் நல்லூர் கோட்டம்)

இந் நிகழ்வில் சிறப்புமலர் வெளியிடும் சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறும் பழையமாணவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தமிழ் முன்பள்ளிச் சமூகம்.

---

## தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 30.10.2015 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 30.01.2016ம் திகதி காலை 9.00 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

---

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை

### அடிப்படைத் தகைமைகள்

- G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18- 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவி வரக்கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங் களை 30.01.2016ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப் பிவைக்கவும்.

விளம்பர இல: 5086
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

---

## Day Classes

உயர்தர மாணவர்களுக்கான
- இரசாயனவியல்
- இணைந்த கணிதம்

துரித மீட்டல் வகுப்புக்கள் மற்றும் கடந்தகால வினாக்கள் என்பவற்றுக்கான விசேட வகுப்புக்கள் (Personal Classes)

தொடர்பு : 0772112291

[யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி பிரதேசங்களில்]

---

## விற்பனைக்கு 077 999 4655

ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

(67620)
(1.16)

---

## வீடு தேவை

தொடர்பு: 071 255 1103

யாழ்.மாநகர எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வீடு விற்பனைக்கு வேண்டும்.

---

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

சென்யோசப் வீதி, வளன்புரத்தில் 1½ பரப்புக்காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

077 498 4307

(67604)
(11,15)

---

## வாழ்த்து தெரிவிக்கின்றோம்

இன்று (16.01.2016) சனிக்கிழமை ஷஷ்டியப்த பூர்த்திவிழா (மணிவிழா) கொண்டாடும்

**பிரம்ம ஸ்ரீ பொ.வெங்கடேஸ்வரசர்மா**
**ஸ்ரீமதி சாந்தியம்மா**



தம்பதிகளை வாழ்த்துகின்றோம்.

இவர்கள் அனலைதீவின் பல ஆலயங்களில் நீண்ட காலமாக நித்திய நைமித்தியங்களைச் சிறப்பாக நடத்தி வருவதுடன் அவர்களின் பரம்பரையினரும் அனலை தீவில் பல ஆலயங்களில் தங்கள் சேவைகளை செய்து வருகின்றனர். எமது ஆலயத்திலும் இவர்களின் மூத்த புத்திரன் சிவஸ்ரீ வெ.நாராயணக் குருக்கள் பூசகராக பல ஆண்டுகள் சேவை செய்து வருகின்றார். எனவே இவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். இவர்களுக்கு நாகேஸ்வரப் பெருமானின் திரு அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,புளியந்தீவு
நாகேஸ்வரன் தேவஸ்தானம்.

(67615)(11,15,16)

---

## தொலைக்காட்சித் துறையில் ஆர்வமுள்ளோருக்கு அரிய வாய்ப்பு

உள்ளூர் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து உற்சாகம் ஊட்டவும், படைப்பாளிகளின் படைப்பை உலகளவில் எடுத்துச் செல்லவும் சர்வதேச தொலைக்காட்சி ஒன்றின் பிரமாண்டமான மெகா தொடர் நாடகம் ஒன்றுக்கு உள்ளூரிலும் வெளிநாட்டிலும் மிக விரைவில் படப்பிடிப்பு நடைபெறவுள்ளது. அதற்காக முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் அதேநேரம்... கலையைத் தொழிலாக மாற்ற விரும்பும் அனைத்துத் தரப்பினரும் விண்ணப்பிக்கலாம்.

கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம், நடிப்பு, நடிகர்கள், நடிகைகள், நகைச்சுவை, ஒப்பனை, தனிக்குரல் நடிப்பு, குரல் கொடுத்தல், கமரா இயக்குநர்கள் , வசனகர்த்தாக்கள், பேச்சாளர்கள் அல்லது

என்னிடம் ஒரு ஐடியா உள்ளது என நீங்கள் நினைக்கும்.....



எல்லோருக்கும் அல்லது தொலைக்காட்சியோடு சம்பந்தப்பட்ட என்ன கற்பனைக் காட்சி இருந்தாலும் எங்களோடு இணையுங்கள்.

Web site: www.ibceylon.com
Email : ib@ibceylon.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கோபாலுபிள்ளை



பிறப்பு
15 . 10 . 1934

இறப்பு
13 . 01 . 2016

வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.15, சங்கிலியன் வீதி, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கோபாலுபிள்ளை 13.01.2016 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கணேசுவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தவயோகம், பாலச்சந்திரன் (ஸ்பெயின்), ரதி (சுவிஸ்), புஸ்பா, இந்திரா (சுவிஸ்), வதனி, ரகு (ஸ்பெயின்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பூலோகநாதன் மற்றும் அனா (ஸ்பெயின்), செல்வம் (சுவிஸ்), சந்திரன் (அபி உணவகம்), சண்முகரட்ணம்(சுவிஸ்), உதயகுமார் (கீர்த்தனா களஞ்சியம் - 29, இராமலிங்கம் வீதி,), சுதா(ஸ்பெயின்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திலகவதி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற ராசா, லலிதாதேவி, நித்தியானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனியல், நாதியா, தியானா (ஸ்பெயின்), ஜீவன், ரஜீவன், சௌமியா (சுவிஸ்), திவ்யா, துஷ்யந் (பிரான்ஸ்), விதுஷன், செந்துசன், அரவிந்த், அபிநயா (யாழ்ப்பாணம்), சயதா, செந்துஷா (சுவிஸ்),துஜீவன் (சுவிஸ்), கீர்த்தனா, நிசோபா, சைனுயா, அர்ச்சனா (யாழ்ப்பாணம்), கரிஷ், யதுஷ், ஆதீஷ் (ஸ்பெயின்) ஆகியோரின் அன்புப் பேரனும், தேவி, ராணி (பிரான்ஸ்),பாஸ்கரன் (கண்ணன் வெதுப்பகம்), சின்னத்தம்பி (மாஸ்ரர்), திரு (கொழும்பு) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 021 205 4253

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானை வேலுப்பிள்ளை



பிறப்பு
1928 . 08 . 24

இறப்பு
2016 . 01 . 14

எழுதுமட்டுவாழ், முகமாலையைப் பிறப்பிடமாகவும் முல்லையடி, பளையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தெய்வானை 14.01.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் (கனடா), கிருஸ்ணபிள்ளை (பளை), சின்ராசு (மாங்குளம்), இராசாத்தி (எழுதுமட்டு வாழ்), ஆறுமுகம் ( எழுதுமட்டுவாழ்), கந்தசாமி (பிரான்ஸ்), சிறி (சுவிஸ்), விக்னேஸ்வரி (கொழும்பு), சித்ரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நாராயண மூர்த்தி மற்றும் சந்திரா, திலகமணி, குருநாதன், இராசையா, ரஞ்சி, சர்மிளா, சாந்தி, தவ நாயகம் ஆகியோரின் அன்பு மாமியும், சிவசீலன், சித்ரவதனா, பாஸ்கரன், சிவாமா, வாணி, மாலா, விஜி, வாமதி, மதி,வதனி, வளர், பானு, கோசலை, கோணேஸ், ஜகி, அனு, ரமேஸ், சுமன், குகன், நிஷாந்தன், ஜாலி, ஆஷா, அபிநயா, அஸ்வினி, சகிலன், அபிராமி, ஷவேந்தன், விந்துஜன், ஜனா, துளசி, துசானி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, லஷ்சுமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தம்பு, குஞ்சு ஆகியோரின் மைத்துனரும், பூட்டப்பிள்ளைகளும், கொப்பாட்டப்பிள்ளைகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எழுதுமட்டுவாழ் தரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகமாலை,
எழுதுமட்டுவாழ்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

# கணபதிப்பிள்ளை நடராஜா (ஆச்சாரி)



வேலணை மேற்கு, வங்களாவடி, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல .60, 6ஆம் பண்ணை, கனகபுரம் கிளிநொச்சியில் வசித்து வந்தவரும், தற்போது வேலணை, 06 ஆம் வட்டாரத்தில் வசிப்பவருமாகிய கணபதிப்பிள்ளை நடராஜா 13.01.2016 புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நாகபூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து- ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் நாகரத்தினத்தின் (கண்மணி) பாசமிகு கணவரும் சிவமுகுந்தன், ஹரிஹரன், அமுல்யகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வி, கார்த்திகா(பிரதேச சபை, வேலணை), கோவர்த்தனி(பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜாதவன், பூர்ணியா, மதுஷினி ஆகியோரின் பாசமிகு பேரனும் தியாகராஜா, அன்னலிங்கம், அன்னலட்சுமி, திலகவதி, அகிலேஸ்வரி, லலிதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் புஸ்பலீலாவதி காலஞ்சென்ற மாலினி மற்றும் இராஜகோபால், பரராஜசேகரம், கருணாநிதி,தவேந்திரராஜா, காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லமான வேலணை, 06 ஆம் வட்டாரத்தில் நாளை (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை தாளையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வங்களாவடி,
06 ஆம் வட்டாரம்,
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆண்டுகளின் பின் சொந்த ஊரில் பொங்கல்





பொங்கல் தினத்தை முன்னிட்டு பலாலி இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற பொங்கலுக்காக பேராவலுடன் ஓடிச்செல்லும் குருக்கள், அந்தப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டு தற்போது இடம் பெயர்ந்து வாழும் மக்கள். (21)





சோதனை மேல் சோதனை







தமது சொந்த மண்ணான பலாலிக்கு பொங்கல் பண்டிகைக்காகச் சென்ற மக்கள் இராணுவச் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வேளை... (21)








தேசிய தைப்பொங்கல் விழா நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக நடந்தது. இதில் பிரதமர் ரணில், வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடக்கு ஆளுநர் பளிக்கார ஆகியோர் உட்பட அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் தமிழ்ப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலைநிகழ்வுகள், நூல் வெளியீடுகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன இருவரை கண்டுபிடிக்க நடவடிக்கை

## பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் உறவினர்களிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன 16
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் புகைப்படம் ஒன்றில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படும் காணாமற்போயுள்ள இரண்டு பேரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர், காணாமற்போனவர்களின் அன்னையரிடம் உறுதியளித்திருப்பதாக அவர்கள் குடும்பத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நெடுங்கேணி பெரியமடுவைச் சேர்ந்த காசிப்பிள்ளை ஜெயவதனி, நெடுங்கேணி சின்னப் பூவரசங்குளத்தைச் சேர்ந்த யோகேஸ்வரன் சந்திராணி ஆகிய இரண்டு தாயார்களும் கொழும்பில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு அவர்களின் மகள் மற்றும் மகன் தொடர்பான வாக்குமூலங்கள் பெறப்பட்டிருக்கின்றன.

காசிப்பிள்ளை ஜெரோமி, யோகேஸ்வரன் மயூரன் ஆகிய இருவரும் கடந்த 2009ஆம் ஆண்டு காணாமற்போயுள்ளனர்.

பின்னர், கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது வெளியிடப்பட்ட தேர்தல் பிரசுரம் ஒன்றில்



மைத்திரிபால சிறிசேன அந்த இருவருடனும் ஏனைய சில மாணவ மாணவியாருடனும் இருந்த ஒளிப்படம் வெளியாகியிருந்தது.

அத்துடன், அதே போன்ற வீடியோக் காட்சியொன்றும் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பப்பட்டிருந்ததைக் கண்டு இந்தத் தாயார் இருவரும் அதனை ஜனாதிபதியின் கவனத்துக்கு நேரடியாகக் கொண்டு வந்து ஒளிப்படத்திலும் காணொலியிலும் காணப்பட்ட தமது பிள்ளை களைத் தேடித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் இந்த அன்னையர் இருவரையும் கடந்த புதன்கிழமை விசாரணை செய்து, அவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டதுடன் காணாமற் போயுள்ள அவர்களின் பிள்ளைகள் இருவரையும் கண்டுபிடிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருக்கின்றனர். (து)

# போரில் அதிகமான பாதிப்பு தமிழருக்கே

## கூறுகிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



யாழ்ப்பாணம், ஜன. 16
போர் ஏற்பட்டபோது ஒருபுறம் இராணுவத்தின் நெருக்குதலுக்குள்ளும் மறுபுறம் விடுதலைப் புலிகளின் நெருக்குதல்களுக்கும் இடையே அகப்பட்டு அதிகம் பாதிக்கப்பட்டது தமிழ் மக்கள்தான் என்பது தெரியும் என்று சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவரது பணியகமான இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகமும் வடமாகாணக் கல்வி அமைச்சும் இணைந்து நடத்திய மாணவர் பொங்கல் விழா மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரமடையவேண்டும் என்பதற்காகத் தமிழர்கள் கடுமையாகப் பாடுபட்டனர். அதனூடாகத் தமிழர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என்று நம்பினர். ஆனால் சுதந்திரம் கிடைத்த பின்னர் சிங்களத்தலைமைகள் தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்க முன்வரவில்லை. ஆனாலும் இனிமேல் ஆயுதங்கள் ஏந்த வாய்ப்பில்லை. தமிழ்க் கட்சிகள் எதிர்பார்ப்பது தமிழ் மக்களுக்குரிய உரிமைகளையே. ஆனால் அவை இதுவரை வழங்கப்படவில்லை. சிங்கள மக்களும் ஒற்றுமையாக - சமாதானமாக வாழவே விரும்புகிறார்கள். எனினும் தனிப்பட்ட அரசியல் தேவைகளுக்காக தமது பலத்தைக் காட்டுவதற்காகச் சில அரசியல்வாதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தெற்கில் மட்டுமன்றி வடக்கிலும் அத்தகைய சிலர் உள்ளனர்.மூவின மக்களும் ஒற்றுமையாக- சமத் துவமாக வாழ வேண்டும். அனைவருக் கும் சமத்துவமான உரிமைகள் உள்ளன. மாணவர்கள் அனைவரும் எதிர் காலத்தில் ஒற்றுமையுடன் ஒரே மக்கள் என்று கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை சிதைந்து போய்விட்டது. தற்போதைய அரசு வடக்கு, கிழக்கு,தெற்கில் புதிய அபிவிருத்தியைக் கட்டியெழுப்பி வருகிறது.

சிறுபான்மை என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. சிறுபான்மை என்று கூறுவது நல்லதல்ல. எனவே சிறுபான்மையினர் என்பதற்குப் புதிய சொல் கண்டறிய வேண்டும்-என்றார். (த-4-101)

# கண் போய்விட்டாலும் உலகில் பிரகாசிப்பேன்

## சந்திரிகா கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 16
ஒன்றிணைந்து வாழ முற்பட்டபோதே ஒரு கண் இல்லாமல் போனது. என்றாலும் பழையவற்றை மறப்போம். எதிர்காலத்தில் நான் நன்றாகப் பிரகாசிப்பேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவரது பணியகமான இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கப் பணியகமும்வடமாகாணக் கல்விஅமைச்சும்இணைந்து நடத்திய மாணவர் பொங்கல் விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் கடந்த காலத்தை மறந்துவிடுவோம். அனைவரும் ஒன்றாக இணைந்து வாழ முற்பட்ட சந்தர்ப்பத்தில்தான் எனக்கு ஒரு கண் இல்லாமல்போனது. என்றாலும் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகச் செயற்படுவோம்.

குறுகிய நோக்கத்தைக் கைவிட்டு எல்லோரும் இணைந்ததாக நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும். ஒவ்வொரு மக்களுக்கும் ஒவ்வோரு கலாசாரம் உள்ளது. அதனை அவர்கள் முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இன, மத வேறுபாடு எதுவும் தேவையில்லை. தான் சிங்கள பௌத்தம். அதற்காகத் தான் தமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதால் தனக்கு எந்தக் குறைச்சலும்ஏற்படப்போவதில்லை. தான் உலகில் மினு மினுங்கிக் கொண்டுதான் இருப்பேன் –என்றார். (த-4-101)

# பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும்

யாழ்ப்பாணம், ஜன.16
வயாவிளான் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் இன்று சனிக்கிழமை அதிபர் வே.த. ஜயந்தன் தலைமையில் கல்லூரியின் நடராஜா அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் சே.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக்கல்வி பணிப்பாளர் ஈஸ்வரநாதன், கௌரவ விருந்தினராக யாழப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன விரிவுரையாளரும், பழைய மாணவருமாகிய இ.சசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-ஐ)

# யாழ்.நகரில் மீள்சுழற்சிக்கான கழிவு சேகரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜன.16
யாழ்.மாநகரப் பகுதியில் மீள் சுழற்சிக்கான கழிவு சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் தமது குடியிருப்புப் பகுதியில் சேகரிக்கும் பழுதடைந்த இலத்திரனியல் பொருள்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை வேறாக்கி இந்தச் சேகரிப்பு நிலையங்களில் வழங்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட் டுள்ளது. குறிப்பாகக் கரையோ ரப் பகுதி மற்றும் நகரை அண்டிய பகுதியில் இந்தக் கழிவு களைச் சேகரிக்கும் நிலையங் கள் அமைக் கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் நிலத்தில் புதைக்கப்படுவதாலும் மற்றும் ஏனைய கழிவுகளுடன் சேர்க் கப்படுவதாலும் சுற்றுச் சூழல் பாதிக்கப்படும். இதனால் இந்தப் புதிய நடைமுறை வருகிறது. (த-ஜ-17)

# இழுவைப் படகு மீன்பிடியில் ஈடுபடும் குருநகர் மீனவர்

## தமது வலைகள் சேதமடைவதாக நெடுந்தீவு மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.16
நெடுந்தீவுக்கடலில் குருநகர் மீனவர்கள் தொடர்ச்சியாக இழு வைப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் நெடுந்தீவு மீனவர் களின் வலை கள் சேதமாக் கப்படுவதுடன். கடல் வளமும் அழிக்கப்படுவதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த வாரம் குருநகரைச் சேர்ந்த இழுவைப் படகுகள், நெடுந்தீவு மீனவர்களின் வலை களை அறுத்தெறிந்துள்ளதாகவும், இதனால் லட்சக்கணக்கில் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாற்பதுக்கும் அதிகமான குருநக ரைச் சேர்ந்த இழுவைப் படகு கள், தீவின் கரையோரப் பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு போடப்பட்டிருந்த பத்துக்கும் அதிகமான மீன்பிடி வலைகள் சேதமாக் கப்பட்டுள்ளன.

குருநகர் மீனவர்கள் இழுவைப் படகுகளைப் பயன்படுத்தித் தொழில் செய்வதால், இந்தப் பகுதியிலும் மீன்கள் அருகிவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (த-ஜ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா சிதம்பரபுரம் முகாம் மக்களுக்கு தற்காலிக கொட்டகை அமைக்க நிதியுதவி



வவுனியா,ஜன.16

கடந்த 25 வருடங்களாக சிதம்பரபுரம் அகதிமுகாமில்வசித்து வரும் மக்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க வடமாகாண மீள்குடியேற்ற அமைச்சு 61ஆயிரம்ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

சிதம்பரபுரம் அகதிமுகாம் மக்களுக்கு ஏற்கனவே காணிகள் பிரித்து வழங்கப்பட்ட நிலையில், அவர்களுக்குக் காணிகளைத் துப்புரவு செய்ய 16ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டிருந்தது.

துப்புரவு செய்யப்பட்டுள்ள காணிகளைப் பார்வையிட்ட சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், துப்புரவு செய்யப்பட்ட காணிகளில் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கு அமைச்சினூடாக பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கினார். (த-ஜ)

## தண்டுவான் ஊடாக முல்லைத்தீவுக்கு இ.போ.ச. பஸ் சேவை நேற்று ஆரம்பம்



தண்டுவான் வாழ்மக்களின் நீண்டகாலக் கோரிக்கைக்கு அமைவாக, தண்டுவான் ஊடான முல்லைத்தீவு செல்லும் இ.போ.ச. பஸ் சேவை நேற்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நாடளுமன்ற உறுப்பினர்களினதும்மற்றும்முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர்களின் முயற்சியின் பயனாகவும் இ.போ.சவின் வட பிராந்திய முகாமையாளர் உபாலி கிரிபத்துடுவவின் பணிப்புக்கு அமைய இந்த பஸ் சேவையானது நேற்று சம நேரத்தில் முல்லைத்தீவுச் சாலையிலிருந்தும், காரைநகர் சாலையிலிருந்தும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த பஸ் சேவையானது காலை முல்லைத்தீவிலிருந்து தண்டுவான், நெடுங்கேணி, ஒட்டுசுட்டான்,மாங்குளம் ஊடான வழித்தடங்கள் வழியாக யாழ். நகரைச் சென்றடையும். இதே நேரம் காலை யாழ். சாலையிலிருந்து புறப்படும் பஸ்சானது மாங்குளம், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, தண்டுவான் வழித்தடங்கள் வழியாக முல்லைத்தீவைச் சென்றடையும்.

இந்த இரண்டு பஸ்களும் பிற்பகல் வேளை அதே வழித்தடங்கள் ஊடாக முல்லைத்தீவையும் யாழ்ப்பாணத்தையும் சென்றடையும்.

இந்த பஸ் சேவையின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 7 மணியளவில் தண்டுவான்பாடசாலைக்கு முன்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் சி.சிவமோகன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்காந்தராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், கமலேஸ்வரன், லிங்கநாதன் ஆகியோரும் வடபிராந்திய முகாமையாளர் உபாலி கிரிபத்துடுவ, முல்லைத்தீவுச் சாலை முகாமையாளர் மனோகரன், காரைநகர்ச் சாலை முகாமையாளர் ஜெயராசா, வட பிராந்திய சாலையின் செயலாற்று முகாமையாளர் கேதீசன் ஆகியோருடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கிராமமட்ட அமைப்பினர், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (த-ஜ-102)

# மர்மப் பொருள்கள் உள்ளதாகக் கூறி தோண்டிய இடத்தில் எதுவுமில்லை



மன்னார்,ஜன.16

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் தோட்டக்காடு கிராம அலுவலகர் பிரிவுப்பகுதியில் காணப்பட்ட காட்டுப் பகுதியில், மர்மப் பொருள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த அடையாளம்காணப்பட்ட பகுதி மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாகத் தோண்டப்பட்டபோதும் எவ்வித பொருள்களும் மீட்கப்படவில்லை.

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் தோட்டக்காடு கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணப்பட்ட கள்ளுத் தவறணைக்கு முன்பாக உள்ள ரயில்கடவைக்குச்சற்றுத்தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் பெரிய மரங்களுக்கு கீழ் மர்மப் பொருள் கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸாருக்கு தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில்மன்னார்பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டதோடு, குறித்த இடத்தில் பாதுகாப்புக்களைப் பலப்படுத்திய பின், குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியைத் தோண்டுவதற்கான நடவடிக்கைளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிவான் ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தோண்டப்பட்டது.

இதன்போது மன்னார் பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார்பொது வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் இட்டன் பீரிஸ் உட்பட பொலிஸ் அதிகாரிகள், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகை தந்த நிலையில், குறித்த பகுதியில் அடையாளம் காணப்பட்ட பகுதிகள் முழுமையாகத் தோண்டப்பட்டன.

எனினும், நீண்ட நேரமாக குறித்த பகுதி மன்னார் நீதிவான் முன்னிலையில் தோண்டப்பட்டபோது, உடைக்கப்பட்ட தேங்காய்த்துண்டுகள் இரண்டு மாத்திரமே குறித்த அகழ்வுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

எனினும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் தொடர்ச்சியாகத் தோண்டப்பட்ட போது எவ்வித பொருள்களும் மீட்கப்படவில்லை. குறித்த பகுதியில் மக்கள் கூட்டம் அதிகரித்த நிலையில் காணப்பட்டது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-ஜ-56)

# மன்னார் பாடசாலைகளில் நடந்த கால்கோள் விழாக்கள்



மன்னார்,ஜன.16

இந்த வருடம் தரம் 1 இல் புதிதாக அனுமதி பெற்றுள்ள மாணவர்களை வைபவ ரீதியாக வரவேற்கும் "கால்கோள் விழா" நேற்று முன் தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலைகளில் சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார்புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் குறித்த கால்கோள் விழா சிறப்பாக இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ஜோசப் ஒகஸ்ரின் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வரவேற்கப்பட்டதோடு, இந்த வருடம் தரம் 2 இல் கல்வி கற்கும் மாணவர்கள், புதிதாக தரம் 1 இல் கல்வி கற்க வந்துள்ள மாணவர்களை மலர்ச்செண்டு மற்றும் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இதனைத்தொடர்ந்து பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வரவேற்பு நிகழ்வு இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சர்வமதத்தலைவர்களும் கலந்து கொண்டனர். (த-ஜ-56)

## தேவையான கல்வியைப் புகட்டாத ஆசிரியர்கள் மீது இனி நடவடிக்கை

துணுக்காய்,ஜன.16

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களும், ஏனையமாணவர்களுக்கு சமனானவர்களாக வருவதற்குத் தேவையான கல்வியைப் புகட்டாத எமது வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் கண்டிக்கப்படுவார்கள், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன்.

துணுக்காய் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நேற்று நடைபெற்ற கால்கோல் விழாக்களில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

650 இற்கும் மேற்பட்ட மாணவர்களை துணுக்காய் வலயம் நேற்று பிரசவித்துள்ளது. பெற்றோர்கள் எங்களைக் கல்வியில் தாழ்ந்தவர்கள் என்றுதான் நினைத்துக் கொள்கிறார்கள். நாங்கள் தாழ்ந்தவர்கள் இல்லை என்பதை இவர்களுக்கு மிக விரைவில் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

யாழ்ப்பாணமாக இருக்கட்டும், வவுனியாவாக இருக்கட்டும், மன்னாராக இருக்கட்டும், முல்லைத்தீவாக இருக்கட்டும் எதுவாக இருந்தாலும் எந்த இடத்துப் பிள்ளைகளுக்கும் எங்கள் பிள்ளைகள் தாழ்ந்தவர்கள் அல்ல. அவர்களுக்குச் சமனானவர்கள் என்று எண்ணியே ஆகவேண்டும்.

இதற்காக நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். இந்த ஆசிரியர்கள் இதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. பாடசாலைகளும். இந்தக் கட்டடங்களும், இந்த வளங்களும் ஆசிரியர்களைத் திருப்திப்படுத்த வழங்கப்படவில்லை. எங்கள்பிள்ளைக்குக் கல்வி கொடுக்கவே வழங்கப்பட்டன.

ஆகவே ஆசிரியர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பது எமது அவசியம் அல்ல. சிறப்பாகக் கற்று கொடுக்கின்ற ஆசிரியர்களை நாங்கள் பாராட்டுவதுடன், அவர்களைப் பெருமைப்படுத்துவோம், பரிசில்கள் கொடுப்போம், கேடயம் கொடுப்போம், சான்றிதழ் கொடுப்போம் ஆனால் சிறப்பாகக் கற்பிக்காத ஆசிரியர்களை நாங்கள் கண்டிப்போம். ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்போம். அவர்களுக்கான சம்பள ஏற்றத்தை நிறுத்துவோம்.

எமது இறுதிஇலக்குஎங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கிடைக்க வேண்டும் என்பதே என அவர் மேலும் குறிப்பிட்டார். (த-ஜ-21-ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.16
ஊர்காவற்றுறை பிரதேச சபையால் புளியங்கூடல் கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கையை வரவேற்கும் அயல் கிராமங்கள், தங்களது பகுதியிலும் இந்த நடவடிக்கையை விரிவுபடுத்துமாறு செயலாளரைக்கோரியதைத்தொடர்ந்து கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் புளியங்கூடல் பகுதியில் இரவு பகலாக அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகளால் விவசாயத்துக்கு மட்டுமல்ல, போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுவதாகப் பிரதேச சபைச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்த மக்கள், பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து மேற்கொண்டு வரும் விவசாயத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

மக்களின் இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து செயலாளர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாகக் கடந்த வாரம் 71 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூபா 4 லட்சத்து 65 ஆயிரத்துக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இந்த நிலையில் செயலாளரின் நடவடிக்கையை வரவேற்றுள்ள சூரியாவத்தை, நாரந்தனை வடக்கு ஆகிய அயல் கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களது பகுதியிலுமுள்ள விவசாயத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

இவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து, மேற்படி இரு கிராமங்களிலும் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (த-ஜ-115)

# பளையிலிருந்து கொக்குவிலுக்கு குறுகிய ரயில் சேவை வேண்டும்

## மாணவர்கள் தரப்பில் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன.16
பளையிலிருந்து யாழ்ப்பாணம், கொக்குவில்வரை குறுகிய ரயில் சேவை ஒன்றை நடத்துமாறு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

> “தினமும்காலை 7 மணிக்கு பளையிலிருந்தும் மாலை 4 மணிக்கு கொக்குவிலிருந்தும் இந்தரயில்சேவையை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.”

தினமும் காலை 7 மணிக்கு பளையிலிருந்தும் மாலை 4 மணிக்குகொக்குவிலிருந்தும் இந்த ரயில் சேவையை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மற்றும் தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றுக்கு தினமும் இரண்டு பஸ்களில் பயணிக்கவேண்டியுள்ளது. அத்துடன் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களில் செல்லும் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மிதி பலகையில் பயணிக்க வேண்டியநிலையும்காணப்படுகின்றது.

இதனால் மாணவர்களின் நலன்கருதி பளையிலிருந்து தினமும் காலை7 மணிக்கு குறுகிய ரயில் சேவை நடத்தப்பட்டால்அனைத்து மாணவர்களும் பயன் பெறக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி நேரங்களில் தற்போது யாழ்ப்பாணத்திலிருந்தோ கொழும்பிலிருந்தோ ரயில் சேவை இல்லாததால் மாணவர்கள் போக்குவரத்தில் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட மாணவர்களும் அரச பணியாளர்களும் யாழ்ப்பாணத்திலிருந்தும் கிளிநொச்சியிலிருந்தும் குறுகிய சேவையை நடத்துமாறு கோரியுள்ளனர். (ற-ஜ-9)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 16
சேவைச்சிறப்பும் உற்பத்தி மேம்பாடும் எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் வடக்கு மாகாண சபையின் நிதிப் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் பணிபுரியும் சேவையாளர்களுக்காக நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில், கலாநிதி க.குகநாதன் முழுநேர விரிவுரையாளராக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளார். (த-ஜ-ரி5)

# கள்ளுத் தவறணையை அகற்றக்கோரி கல்லாரை கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.16
மல்லாகம் கல்லாரை கிராமத்தில் இயங்கும் கள்ளுத் தவறணையை அகற்றக் கோரி கல்லாரை வளர்மதி சனசமூக நிலையத்தினர், அந்த ஊர் பொதுமக்களுடன் இணைந்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர் என்று நிலையப் போசகர் தெரிவித்துள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி நெடுங்காலமாக இந்த இடத்தில் கள்ளுத் தவறணை இயங்கி வருகின்றது என்றும், இதனால் அந்த ஊர் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாவதுடன் குறிப்பாக மாணவர்கள் தமது எதிர்காலத்தையே சிதைக்கக்கூடிய அளவுக்கு இந்தக் கள்ளுத் தவறணை உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட சில காலம் இந்தக் கள்ளுத் தவறணை இயங்காமல் இருந்து மீண்டும் ஜனவரி மாதம் தொடக்கம் இயங்க வைப்பதற்கு முயற்சி செய்த போது, அந்தக் கிராமமக்கள் சனசமூக நிலையத்தினூடாக ஒன்றுதிரண்டு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

ஏற்கனவே இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் அடிக்கடி நிகழ்ந்துள்ளன எனவும், ஏற்கனவே கிராமசேவையாளருக்கும், பிரதேச செயலருக்கும் கடித மூலம் தெரியப்படுத்தியும் இந்தக் கள்ளுத் தவறணையை மீளவும்ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கிராம சேவையாளரிடம் தொடர்பு கொண்ட போது, தனக்கு கிடைக்கப்பெற்ற கடிதம் ஏற்கனவே பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது என்றும் நிலையப் போசகர் தெரிவித்தார். (ற-ஜ)

# ஊழியர் நம்பிக்கைக் கொடுப்பனவு பெறத் தவறியோருக்குச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,ஜன.16
கடந்த கால போர்ச் சூழ்நிலைகளாலும் இடப்பெயர்வின் போதும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தவறியவர்களுக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன.

கடந்த 1984 ஆம் ஆண்டில் இருந்து 1987 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்த ஊழியர் நம்பிக்கை நிதியைப் பெறுவதற்குத் தவறிய சுமார் 75 வரையிலான சங்கப் பணியாளர்களுக்கு இந்தக் கொடுப்பனவு தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் என். உமாகரன் தெரிவித்தார்.

போர்ச் சூழ்நிலை மற்றும் இடப்பெயர்வின்போது பணியாளர்களின் ஆவணங்கள் தவறியமையால் இந்தக் கொடுப்பனவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

சங்கத்தின் தற்போதைய தலைவர் மேற்கொண்ட முயற்சியால் கொடுப்பனவைப் பெறத் தவறிய பணியாளர்களுக்கு மீண்டும் அந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் காரணத்தால் இந்தக் காலப் பகுதியில் சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று ஊழியர் நம்பிக்கை நிதியைப் பெற்றுக்கொள்ளாத பணியாளர்கள் சங்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த ஊழியர் நம்பிக்கை நிதியைப் பெறத்தவறிய பணியாளர்களில்சிலர் சாவடைந்தும் உள்ளனர்.

எனினும் இவர்களின் பின் உரித்தானவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும். (த-ஜ-17)

# தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.16
யாழ். மாவட்ட கலை, கலாசார பேரவையின் தைப்பொங்கல் விழாநாளைஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது. அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் இந்த விழா நடைபெறவுள்ளது. (த-ஜ)

# வெள்ளிவிழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழ். நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் வெள்ளிவிழாவும் சிறப்புமலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குநல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-ஜ)

# பஸ்ஸினுள் கண்டெடுத்த அலைபேசியை உரிமையாளரிடம் ஒப்படைத்த அலுவலர்

சாவகச்சேரி,ஜன.16
பஸ்ஸினுள் கண்டெடுத்த விலைகூடிய அலைபேசியை அதன் உரிமையாளரை வரவழைத்துக் கையளித்துள்ளார் சாவகச்சேரி நீதிமன்ற அலுவலர்.

கடந்த 11 ஆம் திகதி மாலை கடமை முடிந்து வீடு திரும்பிய அலுவலர், வவுனியாவிலிருந்து வந்த இ.போ.ச. பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்குப் பயணித்துள்ளார். அவர் யாழ். பஸ் நிலையத்தில் இறங்கும்போது ஆசனமொன்றில் தேடுவாரற்ற நிலையில் காணப்பட்ட அலைபேசியை எடுத்து வீட்டுக்குக் கொண்டு சென்று அலைபேசிக்கு மின் ஏற்றம் செய்த வேளையில் அலைபேசியின் உரிமையாளரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலளித்த அலுவலர் சாவகச்சேரி நீதிமன்றுக்கு வருமாறு அறிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு வருகை தந்த யாழ்.சித்த மருத்துவ பீட மாணவியான கரவெட்டியைச் சேர்ந்த பெண், உரிய ஆவணங்களைக் காண்பித்து அலைபேசியைப் பெற்றுச் சென்றுள்ளார்.

கடந்த வாரம் சாவகச்சேரி நீதிமன்றில் கடமையாற்றும் மற்றொரு அலுவலர் மானிப்பாய் வீதியில் கண்டெடுத்த 15 பவுண் நிறையுடைய தங்க நகைகளை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து உரிமையாளரிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-9)

# சங்காபிஷேகமும் பாற்குடப் பவனியும்

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் பாற்குடப் பவனியும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று காலை 7 மணி முதல் 1008 சங்காபிஷேகமும், மாலை பூந்தண்டிகையில் சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும், இரவு விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன்வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயத்திலிருந்துமகளிரின்பாற்குடப்பவனி இடம்பெற உள்ளது. (ற-ஜ-250)

# சிங்கராஜவனத்தில் அரிய செடிகளைத் திருடிய ஜேர்மன் தம்பதிக்கு அபராதம்

கொழும்பு,ஜன.16
சிங்கராஜவனத்தில் அரிய வகைச்செடிகளின் கன்றுகளை திருடிய ஜேர்மனியைச் சேர்ந்த தம்பதிக்கு கலவான நீதிமன்றில் 18 லட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கலவான வனத்துறை அதிகாரியான ஆர்.எம். எல் ரண வீரவினால் சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் ஜேர்மனியில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாளர்களாகச் சேவையாற்றுவது நீதிமன்ற விசாரணைகளின்போது தெரியவந்தது. சந்தேக நபர்களிடம் 32 வகையான கன்றுகள் இருந்ததாகவும், பெத்தறை பிரதேசத்தில் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் நீதிமன்ற உத்தரவின் பேரில் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட வேளையில் இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரம்பரியமான நாட்டுக்கு உரித்தாகியிருக்கும் வளங்களைக்கடத்திச்செல்வதற்குவெளிநாட்டவர்களுக்கு இடமளிக்க இயலாதெனத் தெரிவித்திருந்த நீதிவான் பிரதிவாதிகளுக்கு மேற்குறிப்பிட்டதண்டத்தொகையை விதித்திருந்தார். (த-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வேலைவாய்ப்புக்கள் கோரி பட்டதாரிகள் தொடர் போராட்டம்

கொழும்பு,ஜன.16
அனைத்துப் பட்டதாரிகளுக்கும், அரச வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி நாடு முழுவதிலுமுள்ள பிரதான மான நகரங்களில் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாக ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித் துள்ளது.
அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் 30ஆயிரத் துக் கும் மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் இருக்கும் நிலையில், அவற்றுக்கு பட்டதாரிகளைச் சேர்த் துக் கொள்ளும் செயற்றிட்டம் அரசிடம் இல்லை என்று ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளரான தம்மிக்க முனசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.
தற்போது குருநாகல் நகரத்தில் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்து கண்டியிலும், மாத்தறை நகரத்திலும் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டங்களை ஒழுங்கு செய்யவுள்ளதாகவும் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.
மேலும், 2012 ஆம் ஆண்டின் பின்னர் பட்டங்களைப் பெற்றுள்ள 20 ஆயிரம் பேர் வரையில் ஏற்கனவே வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருப்பதாகவும் முனசிங்க மேலும் கூறினார். (த-ஜ-22)

# சிகரெட் புகையிலைக்கு 2020 இல் முற்றாகத் தடை

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.16
2020 ஆம் ஆண்டில் இருந்து சிகரெட் புகையிலைச் செய் கைக்குத் தடைசெய்யப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
நாட்டின் பொருளாதாரப்பலம் சம்பந்தப்பட்ட முடிவுகள் தீர்மானங்களை மேற்கொள் ளும் போது மனிதனின் நலத்துக்குத் தேவையான விடயங்கள் தொடர்பாக ஊக்கப்படுத்தி விடு வதற்கும், ஆரோக்கியத்துக்குச் சவால் விடுக்கும் உற்பத்திகளைச் சமூகத்திலிருந்து அகற்றி விடு வதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
அதற்கமைய இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து பொலித்தீனுக்கான தடை நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது. குறிக்கப்பட்டுள்ள மைக்ரோன் அளவுக்குக் குறைந்த பொலித்தீன் வகைகளை விற்பனை செய்வோருக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது.
சிகரெட் புகையிலைச் செய்கையை 2020 ஆம் ஆண்டில் முற்றாகவே தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது சம்பந்தமாக அமைச்சரவையில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-ஜ-22)



# நோயாளி ஒருவரிடம் அறவிடும் அதிகூடிய கட்டணம் ரூபா 2,000

கொழும்பு,ஜன.16
தனியார் வைத்தியசாலையொன்றிலோ அல்லது தனியார்துறைவைத்தியமையமொன்றிலோ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளும் நோயாளரொருவரிடமிருந்து மருத்துவ நிபுணரொருவரால் அறவிட்டுக் கொள்ளக்கூடிய கட்டணத்தை அதிக பட்சமாக 2 ஆயிரம் ரூபாவாக வரையறுப்பதற்குச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
அதற்கமைய நிபுணத்துவ வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ளும் நோயாளியொருவரிடமிருந்து அறவிட்டுக் கொள்ளக்கூடிய மருத்துவக் கட்டணம் 250 ரூபாவிலிருந்து 2,000 ரூபா வரையிலானதோடு, சம்பந்தப்பட்ட தனியார் துறை வைத்தியசாலையின் செலவினமாக மேலும் 100 ரூபாவில் இருந்து 500 ரூபா வரை அறவிட்டுக்கொள்ள இயலுமெனச் சுகாதார அமைச்சின் தனியார்துறை சுகாதார சேவைகள் கண்காணிப்புச் சபையின் செயலாளர் மருத்துவ நிபுணர் திருமதி ஆரியரத்ன தெரிவித்தார்.
தனியார் துறை சுகாதார சேவைகள் கண்காணிப்புச் சபையினால் புதிதாக வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கு அமைய, தனியார் துறை வைத்திய மையமொன்றில் சேவையாற்றும் மருத்துவ நிபுணரொருவர் இவ்விதம் கட்டணங்களை அறவிட்டுக்கொள்ளும் அதே வேளை, நோயாளர் ஒருவருக்காகக் குறைந்த பட்சமாக பத்து நிமிடங்கள் வரை தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)



இலங்கை வந்துள்ள பிரிட்டன் வெளிநாடு மற்றும் பொது நலவாய அலுவலகத்துக்கான இராஜாங்க அமைச்சர் ஹியூகோஸ்வைர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (த)

# குறைந்த பட்ச பஸ் கட்டணத்தை 10 ரூபாவாக அதிகரிக்கவும்

கொழும்பு,ஜன.16
8 ரூபா என்ற குறைந்த பட்ச கட்டணத்தை 10 ரூபா வரை அதிகரிக்குமாறு அகில இலங்கை தனியார் பஸ் சங்கங்களின் சம்மேளனம் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
கொழும்பு உள்ளிட்ட ஏராளமான பயணமார்க்கங்களில் நிலவும் அதிகரித்த வீதி நெரிசல்கள் காரணமாக பஸ் போக்குவரத்து முற்று முழுதாக முடக்கம் அடைந்துள்ளது.
பஸ்களில் கிடைக்கும் வருமானம் மிகப் பெருமளவில் குறைவடைந்து தொழிலை நடத்திச் செல்ல இயலாதநிலை உருவாகியிருப்பதே இந்தக் கோரிக்கை விடுப்பதற்கு முக்கியமான காரணியாகியிருப்பதாக அகில இலங்கை தனியார் பஸ்சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதான அமைப்பாளரான கமகே சுமணதாஸ தெரிவித்தார்.
இதைவிட பஸ்களுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்களின் விலைகளும் நூறு வீதமாக அதிகரித்திருப்பதாகவும், இந்த நிலைப்பாடு தொடருமேயானால் தனியார் துறை பஸ் தொழில் துறையானது இன்னும் ஆறு, ஏழு மாதங்களில் முழுமையாகவே சரிந்து விடும் எனவும் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

# 3 லட்சம் மெற்றிக் தொன் அரிசி துறைமுக களஞ்சியத்தில் பழுது

## கால்நடைகளுக்கு வழங்கத் தீர்மானம்

கொழும்பு,ஜன.16
வெளிநாடொன்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, துறைமுகத்தின் களஞ்சியங்களில் பழுதடைந்து வரும் வரையிலான் அரிசியை கால் நடை உணவுகளுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக அரச வட்டாரங்கள் தகவல்கள் தெரிவித்துள்ளன.
இரண்டு வருடங்களுக்கு முன்னர் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தால் பங்களாதேஷில் இருந்து இந்த அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. துறைமுகத்தின் களஞ்சியங்களில் உள்ள இந்த அரிசியை உலக உணவுத்திட்டத்துக்கு வழங்குமாறுசில அமைச்சர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.
ஆனாலும், அந்த அரிசியை கால் நடை உணவுகளுக்காக வழங்கிவிடுமாறும், அரசின் களஞ்சியங்களில் மேலதிகமாக அரிசி இருப்பதால் அவற் றுள் ஒன்றை உலக உணவுத் திட்டத்துக்குப் பெற்றுக்கொடுக்குமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-ஜ-22)

# பொலிஸாருக்கு எதிராக 604 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு,ஜன.16
பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகக் கிடைக்கப் பெற்றுள்ள 604 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இவற்றுள் பெரும்பாலான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் அந்தப் பதவி நிலைக்குக் கீழ் உள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்டவைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக அக்கறை காட்டிச் செயற்படாமை மற்றும் பக்கச் சார்பாகச் செயற்படுவது தொடர்பாக இந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
இந்த விசாரணைகளுக்கு பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாணப்பணிப்பாளர்கள் அனைவரும் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துக்கு வரவழைக்கப் பட்டிருந்தனர். (த-ஜ-22)

# செங்கலடி இரட்டைக் கொலை; சந்தேகநபரான மாணவிக்கு பிணை

கொழும்பு,ஜன.16
கிழக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய செங்கலடி இரட்டைக் கொலையின் நான்காவது சந்தேக நபரான பாடசாலை மாணவியை அவரது பாதுகாவலரான அம்மம்மாவுடன் செல்வதற்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.
மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தின் இந்த இரட்டைக்கொலை வழக்கு விசாரணை நடை பெற்றபோது பிணையில் விடுதலை செய்யப்பட்ட குறித்த மாணவி நீதிமன்றக் கட்டளைக்கு அமைய மட்டக்களப்பு சினேகதீபம் இல்லத்தில் கடந்த ஒன்றரை வருட காலமாக இருந்து வந்துள்ளார்.
குறித்த நன்னடத்தைப் பிரிவின் இல்லத்தில் தங்கவும், ஆனைப் பந்தி வித்தியாலயத்தி[illegible] நடவடிக்கைகளை [illegible] ளவும், உளவள ஆற்றுப்படுத் தலுக்கு உட்படுத்தவும் நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் உத்தரவிட்டிருந்தார்.
இதன்படி இந்த சந்தேகநபரான மாணவி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகள், வைத்தியர் மற்றும் உளவள அறிக்கைகள் கிரமமாக மேல் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு [illegible]ருந்தன.
இந்த நிலையில் சந்தேகநபரும் கொலையுண்ட தம்பதியரின் புதல்வியுமான குறித்த மாணவியை அவரது பாதுகாவலராகவிருக்கும் அம்மம்மாவுடன் வீடு செல்ல அனுமதிக்குமாறு (பிணையில்) மேல் நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.
கடந்த செவ்வாய்க்கிழமை அந்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்த மட்டக்களப்பு மேல் நீதி மன்ற நீதிவான் சந்திரமதி விஸ்வலிங்கம், சந்தேகநபரான மாணவியை அவரது பாதுகாவலரான அம்மம்மா திருமதி சுந்தரமூர்த்தியுடன் வீடு செல்வதற்கு அனுமதியளித்தார்.
அதேவேளை, எச்சந்தர்ப்பத்திலும் ஏனைய சந்தேகநபர்களுடன் இந்த மாணவி எந்தத் தொடர்புகளையும் கொள்ளக் கூடாதெனவும் குறிப்பாக அவர்களுடன் தொலைபேசித் தொடர்பு கொள்ளக்கூடாது என்பது உட்பட சில கடின எச்சரிக்கையும் நீதிபதியால் விடுக்கப்பட்டது. (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா, சிரியா, உகண்டா தூதரகங்களுக்குப் பூட்டு

## பயங்கரவாத அச்சுறுத்தலே காரணம் என்கிறது அரசு

கொழும்பு, ஜன. 16
பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக சிரியா, லிபியா மற்றும் உகண்டா ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களை மூடுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. எனினும், ஈராக்கிலுள்ள தூதரகம் தொடர்ந்தும் செயற்பாட்டில் இருக்கும் என அரசு நேற்றுமுன்தினம் அறிவித்தது.



அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:-
பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக ஈராக், சிரியா, லிபியா மற்றும் உகண்டா ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களை மூடிவிட்டு வேறு நாடுகளில் திறப்பதற்கான யோசனையை அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் முன்வைத்திருந்தார்.
லிபியா, உகண்டா, சிரியா போன்ற நாடுகளில் ஐ.எஸ்., போகோ ஹறாம், அல்சபாப் போன்ற தீவிரவாத அமைப்புக்களால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதனால் அங்கு இப்போது தொழில் நிமித்தமாகவோ வேறு தேவைகளுக்காகவோ இலங்கையில் இருந்து எவரும் செல்வதில்லை. அதனால் அங்குள்ள தூதரகங்களை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றது.
இருப்பினும், ஈராக்கில் தற்போது சுமுகமான நிலை ஏற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கையர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கு வசிப்பதாலும், இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் மூன்றாவது பிரதான பங்கை ஈராக் வகிப்பதாலும் அங்குள்ள தூதரகத்தின் தேவை உணர்த்தப்பட்டது. அதனால், அதனை மூடுவதற்கான உத்தேசம் அரசுக்கு இல்லை -என்றார். (த-சி)

## கிரிதல புலனாய்வு ஆவணங்கள் இராணுவப் பொலிஸாரின் வசம்

கொழும்பு, ஜன. 16
கிரிதல இராணுவ முகாமில் உள்ள முக்கியமான இராணுவப் புலனாய்வு ஆவணங்கள் இராணுவப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த கிரிதல இராணுவப் புலனாய்வு முகாம், இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரில் சீல் வைத்து மூடப்பட்டது.
அங்கிருந்த அதிகாரிகள் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அகற்றப்பட்டு, மின்னேரியாவில் இருந்து சென்ற இராணுவப் பொலிஸார் முகாமின் பாதுகாப்பைப் பொறுப்பேற்றுள்ளனர்.
அத்துடன், 2009 ஆம் ஆண்டு தொடக்கம், 2012 ஆம் ஆண்டு வரை கிரிதல இராணுவ முகாமில் பணியாற்றிய அனைத்து இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினரிடமும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.
அதேவேளை, கிரிதல இராணுவ முகாமில் இருந்த முக்கியமான புலனாய்வு ஆவணங்களையும் இராணுவப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.
இராணுவப் புலனாய்வுப் பிரிவின் மூன்றாவது பற்றாலியன் தங்கியிருந்த இந்த இராணுவ முகாம், கருணா குழுவைச் சேர்ந்தவர்களை வைத்துப் பல்வேறு குற்றச் செயல்களை மேற்கொள்வதற்கான தளமாகப் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே. (த-5)



உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் கொழும்பில் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையும் அவர் சந்தித்துப் பேசினார். (த)

## பிரமுகர்களின் வாகனச் சாரதிகளுக்கு விசேடமாகப் பயிற்சிகள் வழங்கப்படும்

கொழும்பு, ஜன.16
பிரமுகர்களின் சாரதிகள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக வீதிச்சட்டங்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. இதனால் இவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
பிரமுகர்கள் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள், பிரமுகர்களின் அதிகாரத்தைத் தமது கையில் எடுத்துக் கொள்ளாது நிலவும் வீதிச் சட்டங்கள், விதிகளுக்கு அனுகூலமாகவும், அடக்கத்துடனும் வாகனத்தைச் செலுத்திச் செல்ல வேண்டியுள்ளது. விசேடமாக இவை பொதுசன ஊடகங்களில் விமர்சிக்கப்படுகின்றன.
மேலும், பிரமுகர்களின் வாகனச் சாரதிகளுக்கென விசேட பயிற்சியொன்றை நடத்துவதற்கான செயற்பாடுகளை மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.
விசேடமாக, பயணிகள் போக்குவரத்துச் சேவை சாரதிகள் பெரிதும் பொறுப்புடன் தமது தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பெரும் எண்ணிக்கை கொண்ட உயிர்கள் அவர்களது கைகளில் தங்கியுள்ளன. எனவே கட்டாயமாக அவர்கள் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களம் வழங்கும் பயிற்சியைப் பெற வேண்டிய கட்டாயம் உள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## இந்த வருடம் கர்ப்பிணிகளுக்கு எச்.ஐ.வி. குருதிப் பரிசோதனை

கொழும்பு.ஜன.16
2016 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்மாருக்கும் எச்.ஐ.வி. குருதி மாதிரிப் பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் நோய்த் தடுப்பு இயக்கத்தின் வைத்தியப் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.
பிரசவ பாதுகாப்புத் தரம் மற்றும் எச்.ஐ.வி .தொற்றுக்கு உள்ளாகாத குழந்தைப் பேற்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தக் குருதிப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.
ஆண்டொன்றில் நாடு முழுவதிலும் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை கர்ப்பிணித்தாய்மார்களாகப் பதிவாகின்றனர். இந்தக் குருதிப் பரிசோதனை குடும்ப சுகாதார மாதுக்கள் மூலமாகக் கிளினிக் மட்டத்தில் மேற்கொள்ளப்படும்.
இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எயிட்ஸ் பரிசோதனைகளை மேற்கொள்வது புதிய அனுபவமொன்றே என்றாலும் கூட, வெளிநாடுகளில் இது பெரிதும் ஒழுங்குமுறையாக நடைமுறைப்படுத்தப்படுவதோடு கடந்த ஆண்டில் நூற்றுக்கு 60 வரையிலான கர்ப்பிணித்தாய்மார்கள் குருதி மாதிரிப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.
இந்த ஆண்டில் அந்தப் பரிசோதனைகளை 90 வீதம் வரையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும், இந்தப் பரிசோதனைகளை அரச வைத்திய சாலைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது தனியார் வைத்திய சாலைகளுக்கும் கூட வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## தூர சேவை தனியார் பஸ்களுக்கு தரிப்பிடங்கள் அமைக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன.16
உள்ளகப் பிரதேசங்களில் இருந்து தொலைதூர சேவைகளை மேற்கொள்ளும், தனியார் பஸ்களுக்கு பஸ் நிலையங்களை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரான எம்.ஏ.பீ. ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.
குறிப்பாக தனியார் பஸ்களில் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள், தாம் பயணிக்கவுள்ள பஸ் வண்டிகள் வரும் வரையில் தங்கி நிற்பதற்கு இடமொன்று இல்லாதிருப்பதன் காரணமாக, மழைகாலங்களில் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதன் காரணமாகப் பஸ் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மேலும், போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் பணிப்புரையின் கீழ், இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஹேமச்சந்திர, ஏற்கனவே மாத்தறை மற்றும் காலி நகரங்களில் தனியார் பஸ் நிலையங்களுக்குப் பொருத்தமான இரு இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## அரச ஊழியரான மனைவியை இழந்தோர் ஓய்வூதியம் பெற்றுக் கொள்வதில் சிக்கல்

கொழும்பு.ஜன.16
உயிரிழந்துள்ள பெண் அரச ஊழியர்களில், ஏராளமானோர் கணவன்மாரால் கைவிடப்பட்டுள்ள நிலையில் உள்ளனர். இவர்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச்சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
1983 ஆம் ஆண்டுக்கு முன்னர், அரச சேவையில் இணைந்து சாவடைந்த பெண்களின் கணவன்மார், விதவைகள் அநாதைகள், ஓய்வூதியச்சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் 2014 ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.
இதன் காரணமாக மனைவியை இழந்த ஆயிரக் கணக்கானவர்கள் பெரிதும் கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
[illegible] அரச சேவையில் இணைந்து கொண்ட பெண்களுக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வது இல்லாமற் செய்யப்பட்டதோடு, அரச சேவையில் இணைந்து கொள்ளும் ஆண்களுக்கு மாத்திரம் அதில் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.
ஆனாலும், 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச சேவையில் இணைந்து கொண்ட பெண்கள், ஆண்கள் என்ற இரு தரப்பினருக்குமே இந்த விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டிருந்தது.
எனினும் 2014 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள இந்த வாய்ப்பை மீளவும் பெற்றுத்தருமாறு, ஏராளமான கோரிக்கைகள் கிடைத்திருப்பதாக ஓய்வூதியச் சம்பளங்கள் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி மரக்கறிப் பொதியில் போதைப்பொருள் சிக்கியது

வொசிங்டன், ஜன.16
அமெரிக்காவின் டெக்சாசில் போதை மருந்துக்கான கடத்தல் பிடிபட்டது. மரக்கறியான கரட் போன்ற வடிவமைப்பில் பொதி செய்யப்பட்டிருந்த ஆயிரத்து 500 கிலோ கஞ்சா போலி மரக்கறி பொதிகளில் பிடிபட்டது. செம்மஞ்சள் நிறத்தில் பொதி செய்யப்பட்ட கஞ்சாப் பொதியில் இரண்டாயிரத்து 817 போலிக் கரட்கள் கைப்பற்றப் பட்டன. இந்த கடத்தல் பொருளின் பெறுமதி 500 ஆயிரம் டொலர் என தெரிவிக்கப்பட்டது.
கடத்தல் காரர்கள் தமது திறமையைத் திறம்படக் காட்டுவதாக துறைமுக அதிகாரி தெரிவித்தார்.
இவ்வாறான புது உக்திகளை எதிர்கொள்வது எமது அதிகாரிகளுக்குச் சவாலானதொன்றாகும். எனினும் கடந்த நவம்பரில் இவ்வாறானதொரு 2 மில்லியன் கடத்தல் பிடிக்கப்பட்டது என்றார் அவர். (த-ரி4)

# தற்கொலைக் குண்டுதாரிகளாக 400 சிறுவர்களுக்கு ஐ.எஸ். பயிற்சி

தமஸ்கு, ஜன.16
ஐ.எஸ். அமைப்பினரால் 400 யாசிடி சிறுவர்கள் தற்கொலைப்படைக் குண்டுதாரிகளாகப் பயிற்சி பெற்றுள்ளனர் குர்திஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

> சிறுவர்களையும், தற்கொலை போராளிகளையும் என ஐ.எஸ் அமைப்பினர் உதிரிகளாகவும், இடைவெளியை நிரப்பவும் பயன்படுத்துவர் என இருந்து தப்பிவந்த சிறுவன் தெரிவித்துள்ளான்.

இந்தத் தகவலுக்கு ஆதாரமாக ஈராக்கின் சின்ஜார் மாகாணத்தில் யாசிடி கிராமத்தையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் சார்ந்த 600 சிறுவர்கள், ஐ.எஸ். அமைப்பினரால்கடத்தப்பட்டுள்ளனர். அதில் 200 பேர் தப்பிக்க முயற்சி செய்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
போரின் போது முதல் வரிசையில் நிறுத்தப்படுவது அனுபவமான போராளிகளை ஆகும். சிறுவர்களையும், தற்கொலை போராளிகளையும் ஐ.எஸ். அமைப்பினர் உதிரிகளாகவும், இடைவெளியை நிரப்பவும் பயன்படுத்துவர் என அவர்களிடம் இருந்து தப்பிவந்த சிறுவன் தெரிவித்துள்ளான்.
12 வயதான சிறுவன் ஒருவன் தற்கொலைக் குண்டுதாரிகளின் பயிற்சி முகாமில் இருந்து தப்பி வந்துள்ளான்.



அந்தச் சிறுவன் தெரிவிக்கையில், எங்களில் 60 பேர் இருந்தோம். வான் வழித் தாக்குதல்களின்போது எங்களைப் பாதுகாக்கப்பதுங்குகுழிகள் உண்டு. பயிற்சியின்போது, பெற்றோரைநம்பவேண்டாம் என எமக்கு அவர்கள்அறிவுறுத்துவர். அவர்களைத் தேடிச் சென்று கொல்லவேண்டும் எனப்பயிற்சிஅளிக்கப்பட்டது -என்றான்.
சிரியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு வின் அவதானி கள், கடந்த நான்கு மாதங்களில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதல்கள் 29 சிறுவர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தனர். (த-ரி4)



# சீனாவின் பட்டாசு ஆலையில் தீவிபத்து

பீஜிங், ஜன.16
சீனாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் 5 பேர் உயிரிழந்ததுடன், 7 பேர் காயமடைந்தனர்.
கடந்த புதன் கிழமை ஹெனன் மாகாணத்தில் டொன்கிக்ஸ் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக சீன அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரிக்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்தனர்.
புது வருடப்பிறப்புக்காக பட்டாசுகள் புதிதாக தயாரிக்கப்பட்டன. சீனாவில் பட்டாசு உற்பத்தியில் போதியளவுக்கு பாதுகாப்பு இன்மை இவ்வாறான விபத்துகளுக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)

# இந்தோனேசியத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்பு



ஜகார்த்தா, ஜன.16
இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும் தாமே காரணம் என ஐ.எஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.
இந்தத் தாக்குதலில் பொது மக்கள் உட்பட 5 போராளிகள் உயிரிழந்தனர் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.
மேலும் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் சிறிய குழுவினரே. ஆனால் அவர்களுக்கு சுலாவசி மற்றும் ஜாவாவில் உள்ள தாக்குதல் தாரிகளுக்குத் தொடர்புகள் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.
ஐ.எஸ் அமைப்பின் இணையத் தளத்தில் தாக்குதலுக்குத் தாமே பொறுப்பு என்று அவர்கள் கூறியுள்ளனர்.
இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோ, தீவிரவாதத்துக்கு உலகில் இடமில்லை. ஒவ்வொருவரும் அதற்கு எதிராக போராடக்கடமைப்பட்டிருக்கிறோம் எனக் கருத்துத் தெரிவித்தார்.
இந்தோனேசியா, ஐ.எஸ் அமைப்பின் பல தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துள்ளது எனப் பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.
சுலாவசி தீவில் இயங்கும் நைம் எனும் இந்தோனேசியப்போராளி குழு ஐ.எஸ். அமைப்பினருடன் தொடர்புகொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டிலிருந்து, ஆயிரம் பேர் இவ்வாறான போராளிக் குழுக்களுடன் தொடர்புபட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னரும் அவர்களைக் கண்காணிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி4)

# உலகிலேயே அதிக குடிபெயரிகளாக வாழ்வோர் இந்தியர்; கூறுகிறது ஐ.நா.

புதுடில்லி, ஜன.16
உலகிலேயே அதிகமான எண்ணிக்கையில் சொந்த நாட்டை விட்டு பிறநாடுகளில் குடிபெயர்ந்து வாழும் நாட்டவர் இந்தியர்கள் என ஐ.நாவின் இடம்பெயர்வு தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்தியாவில் பிறந்த 16 மில்லியன் மக்கள் நாட்டை விட்டு பிற இடங்களில் குடியேறியுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
சர்வதேச ரீதியில் 224 மில்லியன் மக்கள், பொருளாதார – சமூகப் போர்ச் சூழல் காரணமாக குடிபெயர்ந்து வசிக்கின்றனர். 2000 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை அகதிகளின் எண்ணிக்கை 41 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 20 மில்லியன் குடிபெயரிகள் அகதிகளாக வசிக்கின்றனர் என அந்தக் கருத்துக் கணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஐ.நாவின் பொது செயலாளர் ஜான் எலியாசன், குடிபெயரிகளாக மக்கள் வாழ்வதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்த அறிக்கையில் குறிப்பிடப்படாத பல்வேறு காரணங்களும் அடங்கியுள்ளன என தெரிவித்தார். மேலும் 40 மில்லியன் மக்கள் நாட்டுக்குள்ளேயே குடிபெயர்ந்துள்ளனர். இந்தியாவின் செல்வந்தர்கள் பலர் அமெரிக்காவில் வசிக்கின்றனர். உலகின் குறிப்பிட்ட பகுதிகளில் குடியேறிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டுக்கு இடையில், ஐரோப்பாவில் குடியேறிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. குறித்த நாடுகளில் காணப்படும் பாதக, சாதக காரணிகளைப் பெறுத்தே குடியேறிகளின் நுழைவு இருக்கும் எனத் தெரிவித்தார்.
2015 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருக்கும் இனங்களின் எண்ணிக்கையின் கணக்கெடுப்பில் இந்தியர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளனர். மெக்சிக்கோவில் 12 மில்லியன் குடிபெயரிகள் வசிப்பதாக சேர்வேயில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு குடிபெயரிகள் 20 நாடுகளில் மட்டுமே வசிக்கின்றனர். குறிப்பாக அமெரிக்கா, ஜேர்மனி, ரஷ்யா, சவுதி அரேபியா, பிரிட்டன் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் வசிக்கின்றனர்.
உலக மக்கள் சனத் தொகையை விடக் குடி பெயரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் குடிபெயரிகளின் எண்ணிக்கை 3.3 சதவீதம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.
உலகின் குறிப்பிட்ட பகுதிகளில் குடியேறிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டுகளுக்கு இடையில், ஐரோப்பாவில் குடியேறிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. குறித்த நாடுகளில் காணப்படும் பாதக, சாதக காரணிகளைப் பெறுத்தே குடியேறிகளின் நுழைவு இருக்கும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தட்டிக் கேட்க எவருமில்லை என்ற நினைப்பின் பிரதிபலிப்பு!

ஐநூற்று இருபத்து மூன்று தமிழ்க் குடும்பத்தினர் பல ஆண்டுகளாக வாழ்ந்த, இரண்டாயிரத்து நூற்றிநாற்பத்தொன்பது ஏக்கர் நிலப்பரப்பு அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கு அரசால் தானம் செய்யப்பட்டுள்ளது.

மகாவலி-எல்(ஸி) வலயம் என்ற பேரில், "லேபல்" ஒட்டப்பட்டு, பெரும்பான்மை இன மக்களுக்கு அந்த நிலப்பரப்பு வாரி வழங்கப்பட்டுள்ளது.

தமக்கு எதிரான இந்தத் திட்டமிடப்பட்ட செயல் குறித்து, பூர்விகமாக அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

தமது காணிகளுக்குப் பதிலாக மாற்று நிலங்களை வழங்குவதற்கு, மகாவலி அதிகார சபை முயன்று வருவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகள் உட்பட்ட முல்லைத்தீவின் எல்லைக் கிராமங்களில் இருந்து 1984 ஆம் ஆண்டில், குறிப்பிடப்பட்ட 523 தமிழ்க் குடும்பத்தினரும் இடம் பெயர்ந்திருந்தனர். அதனால் தமது சொந்தக் காணிகளில் அவர்களால் விவசாய நடவடிக்கைகளை மேற்காள்ள இயலாத நிலை தோன்றியது.

போரின் காரணமாக, அவர்களால் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல இயலாத பெரும் சங்கடநிலை உருவானது. அதனைச் சாதகமாக்கிக் கொண்டு--

மகாவலி அதிகார சபை, 2149 ஏக்கர் நிலத்தையும் பெரும்பான்மை இனத்தவர் களுக்குப் பகிர்ந்து அளித்த "கபட வரலாறு" நிகழ்ந்தேறியது!

குறிப்பிட்ட காணிகளுக்கு உரிய உறுதி மற்றும்பிரதான ஆவணங்கள், நொய்ந்துபோயுள்ள நிலையில் எமது மக்கள் வசம் இருந்த போதிலும், அவர்களது "பொன் கொழிக்கும்" நிலங்கள் பெரும்பான்மை மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன!!

அவற்றை இழந்து விட்டதால், தமிழ் விவசாயிகள் மிகத் தொலைவில்- தூரத்தே-உள்ள காணிகளில், 650 ஏக்கர் "பெமிற்" காணிகளில்-இப்போது விவசாயம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் வேண்டுமென்றே தள்ளப்பட்டுள்ளனர்.

மனிதாபிமானம் கழன்று விழுந்த முந்தைய மகிந்த அரசும், இப்போதைய நல்லாட்சிக் "கூச்சல்" அரசும், அண்ணனும், தம்பியும்என்ற நிலையே வெளிச்சமாகி வருகிறது

இன்னும் உள்ளூர்ந்து பார்த்தால், மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களின் காணிகள் முறையற்ற விதத்தில் பெரும்பான்மையினருக்குத் தாரை வார்க்கப்பட்டதற்குச் சமனான நிலைக்கு ஒப்பவும், சரிநிகராகவும்-

இப்போதைய மைத்திரி அரசும், அதன் அதிகாரிகளும் "புகுந்து விளையாடுகிறார் கள்!"

மொத்தத்தில், தட்டிக் கேட்பதற்கு--உறுக்கிக் கேட்பதற்கு ஆள் இல்லையெனில் தம்பி சண்டப் பிரசண்டம்--என்ற நிலையே வேகவேகமாக உயர்ந்து வருகிறது....!!

# உலகின் தலைசிறந்த 100 உதைபந்தாட்ட வீரர்கள்

மனிதர்க ளின் உட லாரோக்கியம், நீண்ட ஆயுள், நோய் நொடியின்றி வாழ்வதற்கு விளையாட்டுக்கள் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன என்றுசொன் னால் அது உண் மையே. உலகில் பல நாடுகளில் பல விளையாட்டுக்கள் நடைபெற்று வந்தாலும் உதைபந்துப் போட்டியையே மிக அதிகமான உலக விளையாட்டு ரசிகர்கள் கண்டுகளிக்கிறார் கள். குறுகிய நேரத்துக்குள்வெற்றிக்களிப்பில் கொண்டாடி மகிழ வைக்கும் இவ் விளையாட்டானது ஐரோப்பிய நாடுகளில் மிக முக்கிய விளையாட்டாகக் கருதப்படுகின்றது. இறுதியாக இடம்பெற்ற உலக கிண்ண உதைபந்தாட்டம் பிறேசில் நாட்டில் 2014 ஜூன் மாதம் நடைபெற்றபோது ஜேர்மனி நாடு உலகக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.



இதேவேளை ஐரோப்பா கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இவ் வருடம் ஜூன் மாதம் 10ஆம் திகதி தொடக்கம்

> இன்று உலகிலே அதிக பார்வையாளர்களை கவர்ந்து வரும் விளையாட்டுக்களில் உதைபந்துப் போட்டியே முதலிடம் வகிக்கின்றது. இதே வேளை அதிக சம்பளம் பெறும் வீரர்களும் இந்த விளையாட்டில் காணப்படுகின்றனர்.

ஜூலை மாதம் 10ஆம் திகதி வரை பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

இன்று உலகியே அதிக பார்வையாளர்களை கவர்ந்து வரும் விளையாட்டுக் களில் உதைபந்துப் போட்டியே முதலிடம் வகிக்கின்றது.

இதேவேளை அதிக சம்பளம் பெறும் வீரர்களும் இந்த விளையாட்டில் காணப்படுகின்றனர். நிற, மத, மொழி, நாடு போன்ற வேறுபாடுகளைக் களைந்து விளையாட்டு ஒன்றே லட்சியமாகக் கொண்டு இவ் விளையாட்டை விளையாடிவருகிறார்கள்.

தற்போது உலகில் பிரபலமான 100 வீரர்களையும் அவர்கள் பெறும்வருடாந்த சம்பளங்களையும் பார்த்தீர்களானால் ஒரு முறை தலை சுற் றும் தான். இப் படத்தில் காணப்படும் முதல்தர 100 வீரர்களின் விபரத்தைப் பார்த்தால் அறிந்துகொள்ளலாம் உதாரணத்துக்கு.

### கோடீஸ்வரர்களான வீரர்கள்

உலகின் முதலாவது சிறந்த வீரர் ஆர்ஜன்ரீனா நாட்டவரான லியோனல் மெஸ்ஸி. இவருக்கு வயது 27. இவர் கடந்த பத்து ஆண்டுகளாக ஸ்பெயின் நாட்டின் முதல்தர உதைபந்தாட்ட அணியான பார்ஸலோனா அணியின் முன்னணி வீரராக விளையாடிவருகின்றார். இவரின் வருடாந்த சம்பளம் என்னவென்று தெரியுமா. 120 மில்லியன் யூரோக்களாகும் (1.200 லட்சம் யூரோ) இலங்கைப் பணத்துக்குக் கணக்குப் பார்த்தால் தலை சுற்றும். எனவே மற்றைய 99 வீரர்களின் கணக்கைப் பார்த்தால்உலகஉதைபந்தாட்டத்தில் எவ்வளவு கோடி பணம் பந்துபோல புரண்டோடுகின்றது என்பது தெரியவரும். உண்மையிலேயே இந்த வீரர்கள் அனைவரும் கோடீஸ்வரர்கள்தான். பிறந்தாலும் ஐரோப்பாவில் ஒரு நாயாய்ப் பிறக்கவேண்டும் என இங்கு வாழும் நம்மவர்கள் ஆசைப்படுவார்கள். ஏனெனில் வீட்டுக்காரர்கள் வருடா வருடம் எந்த நாட்டுக்குச் சுற்றுலா சென்றாலும் அந்த நன்றியுள்ள பிராணியையும் அழைத்துச் செல்வார்கள். அவையும் (நாய்) வருடா வருடம் சுற்றுலா சென்று பல நாடுகளைக் கண்டுகளித்து வருகின்றன. எனவே ஒரு விளையாட்டு வீரனாகப் பிரகாசித்தால் பணம் மட்டுமல்ல புகழும் தேடி வந்து விடும். நம்மவர்கள் இதைச் சிறிது சிந்திப்பார்களா!..இல்லை..இல்லை..டொக்டரும், இஞ்சினியரும், லோயரும் என்றே எப்போதும் கனவில் மிதப்பார்கள். ஆகவே நல்லதொரு விளையாட்டு வீரனாலும் பல சாதனைகள் புரியலாம் என்பதை நாம் புரிந்து கொள்வோம்....

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் ஒவ்வொரு வருடமும் தனது சிறந்த வீர, வீராங்கனைகளைத்தெரிவுசெய்து அறிவித்து வருகிறது. சிறந்த வீரருக்கான இறுதிப்பட்டியலில் றொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர் மூவரும் இடம்பிடித்திருந்தனர். கால்பந்து பயிற்சியாளர்கள், பத்திரிகையாளர்கள், அணித்தலைவர் கொடுத்த வாக்குகளின் அடிப்படையில் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்த விருதை மெஸ்ஸி வெல்வது இத்துடன் ஐந்தா வது முறையாகும். சிறந்த வீராங்கனையாக அமெரிக்காவின் கார்லி லாயிடு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். உலகத்தரவரிசையின் முதல் வீரரான மெஸ்ஸி 5 தடவைகள் இந்த விருதைப் பெற்றுஉலகசாதனையைப்படைத்திருக்கிறார். அதாவது 2009, 2010, 2011, 2012, 2015 ஆண்டுகளில் பெற்றுள்ளார். இவற்றை விட ஐரோப்பாவின் முதல்தர அதாவது சிறந்த வீர னாகவும் 4 தடவைகள் பெற்றுச் சாதனை படைத்திருக்கிறார் (2009, 2010, 2011, 2015) ஆகவே நாமும் விளையாட்டு, மற்றும் உடற்பயிற்சிகளை சிரமமாக மேற்கொள்வோமானால்வாழ்வில்உடலாரோக்கியம் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்ந்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# மீனவர்களை ஏமாற்றுவது எந்த வகையில் நியாயம்?

இந்திய மீனவர்களின் ஊடுருவல் இப்போதெல்லாம் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது என இலங்கை மீனவர் கூறுகின்றனர். பெரும்பான்மையான இந்திய மீனவர்கள் தமது அன்றாடச் சீவியத்துக்கு இலங்கைக் கடற்பிரதேசத்தில் நுழைய வேண்டியுள்ளதாகவும் கூறுகின்றனர். இந்த விடயத்தில் நியாயமான ஒரு தீர்வை எட்ட அல்லது தீர்வுக்கான திட்டத்தை வழங்க இருநாட்டு மீனவர்களும் இயலாதவர்களாகவே உள்ளனர்.



**நெடுந்தீவுக் கரையில் இந்திய மீனவர்கள்**

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழகத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் தமது படகுகளுடன் நெடுந்தீவுக் கரையோரப் பகுதிகளுக்குள் பிரவேசித்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்தனர். உள்ளூர் மீனவர்களும் கச்சதீவுக்கு அப்பால் சென்று மீன்பிடித்து வந்ததுமுண்டு. அந்த நாள்களில் இது ஒரு பெரும் பிரச்சினையாக இருசாராருக்கும் தென் பட்டதாகத் தெரியவில்லை. நெடுந்தீவுக் கடற்பகுதியில் தொழில் செய்த இந்திய மீனவர்கள் உள்ளூர் மக்களுக்கும் தாராளமாக மீன் விற்பனை செய்த சம்பவங்களும் உண்டு. இலங்கைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அதை இந்தியாவில் மாற்றிக் கொள்வது அவர்களுக்கு வசதியாக இருந்துள்ளது. இப்போது காலம் மாறிவிட்டது. நாட்டில் சிக்கல்கள் தோன்றியதையடுத்து கடல் வலயக் சட்டங்களால் வடபகுதி மீனவர்கள் தொழிலுக்குப்போக முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்தே மீனவர் பிரச்சினை ஒரு பெரிய அளவிலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. உள்ளூர் கடற்றொழிலாளர் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் தொழிலுக்குச் செல்லமுடியாதபடி அரசுத் தடை இருந்தது. உள்ளூர் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் செல்ல முடியாத நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி அதிக லாபத்தைப் பெற்றனர். இந்திய மீனவர்கள். கடல் வலயச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னரும்கூட உள்ளூர் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை தொடர்ந்தது. போரை அடுத்து பெரிய படகுகள் உட்பட மீன்பிடிச் சாதனங்களைத் தாங்கள் இழந்து விட்டதாகவும் இதற்கு கூறப்பட்ட காரணங்களாகும். இதுவும் தமிழக மீனவர்களுக்குச் சாதகமாக அத்துமீறல்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இப்போதும்கூட இரவுவேளைகளில் நெடுந்தீவுக் கடற்கரையோரத்தில் மிதக்கும் நகரங்களாக வெளிச்சத்துடன் இந்திய இழுவைப் படகுகள் தொழில் செய்வதைக் காணமுடிகின்றது.

> ❝ போரை அடுத்து பெரிய படகுகள் உட்பட மீன்பிடிச் சாதனங் களைத் தாங்கள் இழந்து விட்டதாகவும் இதற்கு கூறப்பட்ட காரணங் களாகும். இதுவும் தமிழக மீனவர்க ளுக்குச் சாதகமாக அத்துமீறல்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. ❞

**அரசு மட்டத்தில் தீர்வுகாண முடியாது**

மீனவர்கள் பிரச்சினைகளுக்கு அரசு மட்டத்தில் தீர்வு காணப்படும் என்பது சாத்தியமற்றது. இந்தியப் பாதுகாப்புக்கு இலங்கை எவ்வளவு முக்கியம்என்பதை இந்தியாவும், இங்குள்ள பிரிவினைக் கோஷங்களுக்கு எதிராக இந்திய அரசின் தேவை இலங்கைக்கு இன்றியமையாதது என இலங்கையும் கருதுவதால் இதைக் கவனத்தில் கொண்டே இது விடயத்தில் தலையிட வேண்டியுள்ளதால் வீணாக மூக்கைநுழைப்பதைவிடபேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் எனக் கூறிக் காலத்தை இழுத்தடிப்பது பொருத்தமான ராஜதந்திரம் என இருநாட்டு அரசுகளுமே கருதுகின்றன. தமது ஆட்சி யைப் பாதுகாக்க இந்தியா தரும் அழுத்தங்களுக்கு அடி பணியும் நிலையிலும் இங்குள்ள அரசியல்வாதிகள் இருக்க வேண்டியுள்ளது. மீன வர் பிரச்சினையில் தமிழ்த் தலைமைகளும் சரி தென்பகுதி அரசியல் தலைமைகளும் சரி இந்திய அழுத்தங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் போன்றே காணப்படுகின்றனர்.

**ஒரே போக்கிலேயே அரசியல்வாதிகள்**

மீனவர்கள் பிரச்சினையில் இருநாட்டு அரசியல்வாதிகளும் ஒரே போக்கையே கடைப்பிடிக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு அல்லது கைது, தடுத்து வைத்தல் போன்றவை இடம் பெறும்போது மட்டும் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதும் கைது செய்பவர்களை விடுவிக்குமாறு கோருவதுமே மீனவர் பிரச்சினை தொடர்பாக அரசியல்வாதிகள் எடுக்கும் நடவடிக்கையாகும். ஆக்ரோஷமாகப் பேசிப் பொதுச் சொத்துக்களை நாசமாக் கும் நடவடிக் கைக்கு மக்களைத் தூண்டி விடுவதும் அரசியல்வாதிகளின் பாணியாகும், மீனவர்களின் பிரச்சினை குறித்து இலங்கை அரசு, இந்திய மத்திய அரசு, தமிழக அரசு, இருநாட்டு மீனவர் சங்கங்கள், ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர் என சகல தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர். மீனவர்கள் முதலில் ஒன்றுகூடி தமது பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வுகாண எவ்வாறான நடவடிக்கைகள், திட்டங்கள் வரையப்பட வேண்டும் என்ற திட்டவட்டமான முடிவுக்கு வரவேண்டும். தங்களது பிரச்சினைகளுக்கு இதுவே சிறந்த தீர்வைத் தரும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அதிகாரிகள், அரசுத் தலைவர்கள் மட்டத்தில் அவற்றை முன்வைத்து இரு நாட்டு அரசுகளும் மீனவர்களுக்கு உகந்தது என அவர்களால் வழங்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டு செயற்பட வேண்டும். இதை விடுத்து, சும்மா கூடிக் கதைத்து விட்டு உரிய தீர்வை எட்டத் தகுதியற்ற வர் களாகி சாதாரண மீனவர்களை ஏமாற் றிக் கொண்டிருப்பது சம்பந்தப்பட்டவர்களின் விவேக மற்ற தன்மையையே காட்டுவதாக அமையும்.

## நாம் என்ன செய்ய வேண்டும்? நமக்கு என்ன வேண்டும்?

தமிழ் மக்களாகிய நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டிய தருணமிது. நாம் ஐம்பதாம் ஆண்டுகளின் பின்னர் இனக்கலவரங்களால், இந்திய இலங்கை இராணுவங்களால், எம்மிடையே இருந்த சிலரால், சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். பல பாடங்களைக் கற்றுக் கொண்டவர்கள். எம்மிடையே ஒற்றுமை யில்லா விட்டால் ஆண்டவனே கைவிட்டு விடுவான். நாம் ஒற்றுமைப்படுவோம், தெளிவாக இருப்போம், சாதனைகள் செய்வோம், புதிய தலை முறையை தன்னம்பிக்கை மிக்கவர்களாக வளர்த்தெடுப்போம். வெளிநாடுகளில் எமது இளந்தலை முறையினர் பல சாதனைகளைச் செய்துவருகிறார்கள்.

உள்நாட்டி லும் வெளிநாடுகளிலும் செயற்படும் எமக்கு எதிராக தீய சக்திகளை வெற்றி கொள்வோம். எமக்காக பல தசாப்தங் களாக பலர் வயது வித்தியாசமின்றி எமது இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளனர். எமக்கு நல்ல சுபீட்சமான வாழ்வு கிட்டும்.

கல்வி கற்பதிலும் சாதனை செய்வதிலும் தமிழர்களாகிய நாங்கள் சளைத்தவர்க ளல்ல. பாதிக்கப்பட்ட பல இனங்கள் உல கில் மீண்டும் தலை நிமிர்ந்து சாதனைகள் புரிவதை நாம் காண்கின்றோம். கல்வியில், விவசாயத்தில், மீன்பிடியில், தொழில் நுட்பத்தில், வர்த்தகத்தில் பல சாதனைகள் செய்வோம். சகலருக்கும் தொழில் கொடுக்க விவசாயத்தில் உற்பத்தியில் புரட்சி செய்வோம் ஆடு, மாடுகளை வளர்த்து பாற்பண்ணைகளை உருவாக்குவோம். பயறு, உளுந்து, குரக்கன், வரகு, சாமை உணவுகளை உண்டு எமது ஆரோக் கியத்தைப் பேணுவதுடன் விவசாயிகளை இப்பயிர்களை உற்பத்தி செய்யச்செய்து தொழில் கொடுப்போம். பனை, வாழை மரங்களின் கழிவுகளில் இருந்து உற்பத்திப் பொருள்கள் செய்ய தொழிற்சாலைகளை ஆரம்பிப்போம். மீன்ரின் தொழிற்சாலைகளை ஆரம்பித்து மீன் பிடியை அதிகரிக்கச் செய்வோம்.

பல தசாப்தங்களாக கொலை, கொள்ளை, குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடு, ஆளுக்கு ஆள் அறிக்கை என்று மட்டும் செய்தி வந்த ஊடகங்களில் நல்ல செய்திகள் மட்டும் இடம் பெறச் செய்ய திடசங்கற்பம் எடுப்போம்.

வாரத்தில் ஒவ்வொரு நாளும் விசேட தினங்களிலும் ஆலயம் சென்று வழிபட உறுதி பூணுவோம். ஆன்மிகத்தலைவர்களின் சொற்பொழிவுகள் ஆக்கங்களை அவாவுடன் கிரகித்துக்கொள்வோம்.

திருக்குறள், சமய நூல்கள் கூறும்படி வாழ்ந்து காட்டுவோம். பெரியோர்கள், முதியவர்களை மதித்து நடப்போம். இளைஞர்களை தவறான வழியில் செல்வதைத் தடுத்து சாதனைகள் செய்ய ஊக்குவிப்போம். உலக நாடுகளில் தமிழ னுக்கு ஒரு வரலாறு உண்டு. அதனை நடை முறையில் காட்டி புதிய யுகம் ஒன்றைப் படைத்து எமது நாட்டில் மட்டுமல்ல உலக அமைதிக்கும் பாடுபடுவோம்.

க. அருமைநாயகம்.

## திருஞானசம்பந்தர் வீதி கவனிக்கப்படுமா?

உரும்பிராய் வடக்குப்பகுதியில் காணப்படும் திருஞானசம்பந்தர் வீதியானது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதியானது குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த வீதியை பயன்படுத்துவோர் அதிக சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அத்துடன் கனரக வாகனங்கள் செல்வதனால் மேன்மேலும் சிதைவுக்கு உள்ளாகி வருகின்றது.

இந்த வீதியை சுன்னாகம் மின்சார நிலையத்துக்குச் செல்வோர், பாடசாலைகளுக்குச் செல்வோர், சந்தைக்குச் செல்வோர், வேலைகளுக்குச் செல்வோர் எனப் பல்வேறுபட்ட தரப்பினரும் பயன்டுத்தி வருகின்றனர். ஆனால் மழை காலங்களில் அதிகளவு நீர் தேங்கி இருப்பதால் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் உழவு இயந்திரமும் ஒரு மோட்டார் சைக்கிளும் விபத்துக்கு உள்ளாகி, இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிர் இழந்ததுடன் மற்றையவர் படுகாயமடைந்தார் என்பது. யாவரும் அறிந்ததே.

ஆகவே மேற்கண்ட சிரமங்களைக் கருத்திற் கொண்டு தாங்கள் வந்து இந்த வீதியை பார்வையிடுவதன் மூலம் இதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதோடு தாங்கள் பத்திரிகையில் இந்தப் பிரச்சி னையை பிரசுரிப்பதன் மூலமும் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு சென்று இந்த வீதியை விரைவாக புனரமைப்புச் செய்து தருவதற்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் வாழ் நலன் விரும்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் சுயநலவாதிகளே!

மகத நாட்டின் மாமன்னன் மகேந்திரன், மக்கள் மீது அன்பும் மதிப்பும் கொண்டவன்.

ஒருநாள் இரவு மன்னனும் முதல் மந்திரியும் மாறுவேடமிட்டு நகர் வலம் வந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் மக்களின் பேச்சும் செயலும் மன்னனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. மக்களின் மனம் கெட்டு விட்டதோ என்று மன்னன் சந்தேகித்தான்.

மந்திரியும் மன்னரின் சந்தேகத்துக் கேற்றபடி 'மக்கள் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள்' என்று பதில் சொன்னார்.



இதற்கு என்ன செய்யலாம் என மந்திரியும் மன்னரும் சிந்தித்தார்கள். மக்கள் மனம் எந்த அளவுக்குச் சுயநலமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் திட்டமிட்டார்கள்.

மறுநாள் மந்திரி ஒரு யோசனை கூறினார். அதன்படி மக்களுக்கு தமுக் கடிப்பதன் மூலம் ஒரு செய்தி கூறப்பட்டது.

தமுக்கடிப்பவன் கூறி செய்தி இதுதான்: 'பொது மக்களுக்கு அரசரின் கட்டளை. அரண்மனை வாசலில் வைக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய குடத்தில் ஒவ்வொருவரும் குடும்பத்துக்கு ஒருபடி அளவுள்ள பாலை இன்று இரவுக்குள் ஊற்றவேண்டும். இந்த நாட்டு மக்கள் எல்லோருக்கும் நன்மைதரும்படி வேண்டி இந்தப் பால் முழுதும் அரண்மனைக்கு அருகிலுள்ள கோயிலிலுள்ள விநாயகருக்கு அபிஷேகம் செய்யப்படும்.'

மூலைக்கு மூலை, தெருவுக்கு தெரு சந்துக்குச் சந்து இந்தச் செய்தி பரவியது. செய்தி கேட்ட மக்களுக்கு அதிர்ச்சி. 'அபிஷேகம் செய்வதற்கு இவ்வளவு பால் எதற்கு? மன்னருக்கு என்ன இப்படித் திடீர் பைத்தியம்?' என்று மக்களில் பலர் பேசிக் கொண்டார்கள். என்ன பேசினாலும் சரி மன்னரின் கட்டளையை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமே! என எண்ணினர்.

அரண்மனை வாசலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெரிய குடத்தில் மக்கள் வரிசையில் நின்று ஊற்றினார்கள்.

மாலையில் அரசரும் மந்திரியும் வந்து மேலே துணியால் மூடப்பட்டிருந்த குடத்தைத் திறந்து பார்த்தனர். முழுக்க முழுக்க குடம் நிறைய வெறும் நீர்தான் இருந்தது; பால் சிறிது கூட இல்லை. மன்னர் திகைத்தார்; மந்திரி விளக்கம் கூறினார்.

''எல்லோரும் பால் ஊற்றுவார்கள். நாம் மட்டும் ஒருபடி தண்ணீர் ஊற்றினால் தெரியவா போகிறது? என ஒவ்வொருவரும் எண்ணித் தண்ணீரே ஊற்றி இருக்கிறார்கள். ஒருவர் கூட பாலைக் குடத்தில் ஊற்றவில்லை. இப்போது புரிகிறதா மக்களின் மனம் கெட்டு விட்டது; சுயநலம் அதிகமாகிவிட்டது என்பதை?" என்றார் மந்திரி.

மன்னர் பதில் கூற முடியாமல் ஒப்புக் கொண்டார்.

சுயநலத்தினால் மனம் கெடுகிறது.

சுயநலத்தினால் வீட்டிலுள்ளவர்களின் நிம்மதி கெடுகிறது.

சுயநலத்தினால் நாட்டின் முன்னேற்றம் கெடுகிறது.

'இதை மக்களுக்கு உணர்த்த வேண்டியது மன்னாரின் தலையாய கடமை" என்றார் மந்திரி.

சுயநல எண்ணம் தன்னை மட்டுமன்றிச் சுற்றுப்புறம் எல்லாவற்றையும் கெடுத்து விடும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

கி.மு. 27 - ரோமன் பேரரசின் ஆரம்பத்தைக் குறிக்குமுகமாக றோமன் செனட் யூலியஸ் ஸ்ஸர் ஒக்ரவியான ஸுக்கு'அக்ஸ்டஸ்' பட்டம் வழங்கியது.

1492 - ஸ்பானிஷ் மொழியின் இலக்கணம் இஸபெல்லா அரசியிடம் வழங்கப்பட்டது.

1581 - றோமன் கத்தோலிக்கத்தை ஆங்கில நாடாளுமன்றம் சட்டரீதியாகத் தடைசெய்தது.

1761 - இந்தியாவின் பாண்டிச் சேரியை பிரான்சிடமிருந்து பிரித்தானியா கைப்பற்றியது.

1809 - 'லாகொறுனாப்'போரில் பிரித்தானியா பிரான்ஸைத் தோற்கடித்தது.

1939 - ஐரிஸ் றிப்பளிகன் இராணுவம்(IRA)இங்கிலாந்தில் குண்டு வெடிப்பு. நாசப்படுதுதல் காரியங்களில் ஈடுபட்டது.

1945 - அடொல்ப் ஹட்லர் நிலக்கீழ் பதுங்கு குழிக்குள் சென்றார்.

1979 -ஈரானின் கடைசி மன்னரான ஷா ஈராசனை விட்டு தன் குடும்பத்துடன் புறப்பட்டு எகிப்தில் தஞ்சம் புகுந்தார்.

1991 - கூட்டுப்படைகள் ஈராக்குடன் போர். வளைகுடாப் போர் ஆரம்பம்.

1994 - வடபகுதியில் கொடூரமான போருக்கு ஆயத்தம் எனப் பிபிசி தெரிவிப்பு.

1995 - புலிகளின் விமானத் தளம் இரணைமடுப்பகுதியில் என கொழும்புப் பத்திரிகை செய்தி.

1995 -ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் முறைகேடுகளை விசாரிக்க விசேட ஆணைக்குழு என ஐக்கிய முன்னணி அரசு அறிவிப்பு.

1995 - பரிசுத்த பாப்பரசர் இண்டாவது சின்னப்பர் தனது மணிலா வருகையை முடித்துக்கொண்டு பப்புவா நியூகினி பயணம்.

1995 - புலிகளின் புனர்வாழ்வுத் திட்ட அறிக்கை அரசிடம் கையளிக்கப்பட்டது.

2009 - இரண்டு நாள்களில் 20 பொதுமக்கள் சாவு. புதுக்குடியிருப்பு சுண்டிக்குளம், விசுவமடு பகுதிகளில் தொடரும் எறிகணைகளின் கொடூரம்.

2009 - விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து 627 குடும்பங்கள் யாழ்.வந்தன.

2009 - அமெரிக் கட்சன் ஆற்றில் பயணிகள் விமானம் திடீர் கோளாறு காரணமாக 155 பயணிகளுடன் அவசரமாக இறக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக பயணிகளுக்கு சேதம் இல்லை.

2008 - மனிதாபிமானப் போரை வடக்கில் முன்னெடுக்க ஜனாதிபதி உறுதியென அமைச்சர் கெஹலிய தகவல்.

## பொன்மொழிகள்

1. சிந்தனை இல்லாத படிப்பு, பயனில்லாத உழைப்பு, படிப்பில்லாத சிந்தனை இவை மூன்றும் ஆபத்தானவை.
   - ஆண்டர்சன்
2. பிறர் குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன்.
   - வேட்லி
3. நாளை என்பது சோம்பேறிகளின் தினமாகும்.
   - பாபு ராவ்
4. திறமை தானாக வராது; நாம்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
   - ஹேஸ்டர் பீல்
5. தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம்.
   - பீச்சர்
6. நேர்மையான உழைப்பில் கௌரவம் இருக்கிறது.
   - க்ளீவ் லாண்ட்
7. சுதந்திரமாக இரு. எவரிடமும் இருந்து எதையும் எதிர்பார்க்காதே.
   - சுவாமி விவேகானந்தர்
8. தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணியாகும்.
   - திரு.வி.க.
9. மனித வாழ்வு என்பது தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது.
   - தாகூர்
10. உழைத்துப் போராடாமல் வெற்றியை அடைய முடியாது.
   - தாமஸ்
11. படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி.
   -யாரோ
12. சிந்திக்காமல் பேசத் தொடங்குவது, குறி பார்க்காமல் அம்பை விடுவது போன்றது.
   -ஆஸ்கர் ஒயில்ட்

## வர்ணம் தீட்டலாம் வாங்க!



## பிதா

நாற்றைப் போலப் பிள்ளை - அவனைப்
போற்றி வளர்ப்பவர் தந்தை!
ஏற்றம் தருபவர் தந்தை - அதை
ஏற்று உயர்வர் பிள்ளை!

தந்தை சொல்லே மந்திரம் - அதைப்
பிள்ளை கேட்டு நடக்கணும்!
விந்தை உலகில் உயரணும் - அதனால்
உந்தை சொல்லைக் கேட்கணும்

நல்லவை அவரும் செய்வார் - உன்
நன்மைக்கே எதையும் சொல்வார்!
சொல்வதைக் கேட்டுக் கொள்வாய் - என்றும்
நல்லவை நடக்கும் வாழ்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பை உருவாக்க உறுதியும் துணிச்சலும் அவசியம்

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முதலாவது படியாக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவது தொடர்பான பிரேரணை கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பான விவாதம் நடைபெற்று விவாதம் முற்றுப் பெறாமலேயே சபை 26ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. அன்றாவது இது முற்றுப் பெறுமா அல்லது தொடர்ந்து இழுத்தடிக்கப் படுமா? என்று கேள்வி எழுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் உட்பட பலரதும் யோசனைகள் உள்வாங்கப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பெரும்பாலான மக்கள் ஆதரவாக வாக்களிக்கும் பட்சத்தில் புதிய அரசமைப்பு சட்ட ரீதியாக நடைமுறைக்கு வரும். ஆகவே, புதிய அரசமைப்பை உருவாக்கும் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் பயணம் சுலபமானது அல்ல. தெற்கிலும் வடக்கிலும் உள்ள கடும் போக்காளர்களிடமிருந்து வரும் எதிர்ப்புகளை சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டிய நிலைமை இருந்து வருகிறது. அதனால்தான் துணிச்சலான பாதை மீது இலக்கு வைக்கிறார் சிறிசேன- என்று மகுடமிட்டு இந்தியாவிலிருந்து வரும் த ஏசியன் ஏஜ்- பத்திரிகையும், கடினமான வருடம்- என்று மகுடமிட்டு இந்தியன் ரெலிகிராப் பத்திரிகையும் ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளன.

இலங்கை நவீன தேசமாகத் தன்னை மீள உருவாக்கிக் கொள்வதற்கு இயலுமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதியின் நடவடிக்கைகள் ஏற்படுத்தியுள்ளன. பொருளாதார சுபீட்சத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் கொண்டு வரும் என்ற நம்பிக்கையையும் இவை அளிக்கின்றன. ஆனால், இந்த வாய்ப்புத் தவறிப் போகலாம் என்ற அச்சத்தையும் நாம் அலட்சியப்படுத்துவது கடினமான விடயமாகும். அரசியல் ரீதியான எதிர்ப்பு, இனரீதியான தீவிரவாதம் சமீப நாள்களில் மேலோங்கி வருவதே இதற்குக் காரணம். படிமுறையாக இல்லாவிட்டாலும் மாற்றத்துக்கான எதிர்ப்பாக அவை காணப்படுகின்றன. இன்றைய சவால்கள் நிறைந்த நேரத்தில் ஜனாதிபதி உறுதியுடனும் துணிச்சலுடனும் செயற்படுவது அவசியமாகும்.

வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டு அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பணிந்தவர் ஜனாதிபதி. பதினைந்துக்கு மேற்பட்ட திருத்தங்களைச் செய்ய இணங்கினார். துண்டுவிழும் தொகை இதனால் அதிகரித்தது. இப்படியான சில காரணங்களுக்காக தீர்க்கமான தன்மை குறைவாக உள்ளவர் என்ற விமர்சனத்தை ஜனாதிபதி கொண்டிருக்கிறார். தெற்கிலுள்ள இனவாதிகளுக்கு ஜனாதிபதி பணிந்து போவாரானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நம்பிக்கையை அவர் இழந்துவிடுவார். நல்லாட்சி என்ற பெயர் அர்த்தமற்றதாகிவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டுக்கு வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளிலும் எதிர்ப்பு அதிகரித்து வரும் நிலையிலும் ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக இறங்கிவந்து செயற்படுகிறார் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன். அமைச்சர் மனோ கணேசன் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், கூட்டமைப்புத்தலைவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விவரித்துள்ளார். வடக்கு, கிழக்கு மக்களை மற்றொரு ஆயுதப் போராட்டத்துக்குள் பிரிவினைவாதத்துக்குள் தள்ளி விடாதவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சி மீதும் அரசு மீதும் வைத்துள்ள நம்பிக்கை சிதறுண்டு போகாதவாறு அரசு செயற்படவேண்டும் என்று மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார். கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். அப்படியான நிலைமையிலேயே ஜனாதிபதியும் கூட்டமைப்புத் தலைவரும் உள்ளனர். ஜனாதிபதி துணிச்சலுடன் செயற்படுவதன் மூலம் நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்ட முடியும்.






# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

யோ.அபிசன்

எம்முடைய பிறவிப்பயன் பணக்காரனாக வாழ்ந்து, பாங்குடன் பறைசாற்றி, பலரும் பின்பற்றும் வகையில் அமைய வேண்டும். ஒரே ஒரு தடவை மட்டும் பூமியில் நடமாடும் நாம் உப்பரிகையில் உல்லாச மாளிகையில் நம்முடைய பாதங்களைப் படியச் செய்ய வேண்டும். எம்முடைய நிலையிலிருந்து மேம்பட்டு பணக்காரனாக வேண்டும் என்றால் முதலில் முக்கியமான ஒன்று அவசியம். அது தான் மன உறுதி.

எம்முடைய பயம் பணத்தைத் தூர துரத்தி விடும். துணிவுடன் செயற்பட்டால் தான் பணத்தை பெறமுடியும். எம்முடைய எண்ணங்களை அடுத்தவர்கள் எப்போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எம் புதிய திட்டங்களைச் சொன்னால் கிண்டல் தான் செய்வார்கள். மன உணர்வுகளுக்கு என்றுமே மதிப்புத் தரமாட்டார்கள். இதனைக் கண்டு நாம் சோர்ந்து போய்விடக்கூடாது. பறக்கும் இயந்திரத்தைச் செய்யப் போவதாக ரைட் பிரதர்ஸ் சொன்னபோது ஊரும், உலகமும் அவர்களைப் பார்த்து கேலி தான் செய்தது.

> மனிதனுக்கு தீவிரமான ஆசை எதில் இருக்கிறதோ, அதில் அவனுடைய ஆர்வம் அதிகம் இருக்கிறது. அதில் ஈடுபடுவதற்கு அவன் காலம் தாழ்த்துவதே இல்லை. எதில் அவனுக்கு ஈடுபாடு இல்லையோ அதைச் செய்யவே அதிக காலம் செலவிடுகிறான்.

சிரிப்பவர்களுக்கு எல்லாம் பயந்தால் நாம் என்றைக்கும் பணம் சேர்க்க முடியாது. "நாம் வைத்திருக்கும் திட்டத்தைப் பார்த்துச் சிரிப்பவர்களிடம் மாற்றுத்திட்டம் ஏதாவது கூறமுடியுமா என்று கேட்டால் வாயைத்தான் பிளப்பார்களே தவிர வாய்திறந்து ஒன்றும் கூறமாட்டார்கள். சிரிப்பதற்கு மட்டும் தான் தெரியும். நாளைக்கு எம்முடைய செயலில் வெற்றி பெற்றுப் பணக்காரராக ஆகிவிட்டால் அவர்களும் எம் பின்னே ஓடிவந்து எம்முடைய கருத்துக்கு எல்லாம் தலையாட்டுவார்கள். அப்படிப்பட்டவர்களுடைய கேலிக்கும், சிரிப்புக்கும், நகைச்சுவைக்குமா எம் மனம் தளர்வது? நிச்சயமாக மனம் தளரக் கூடாது. எமது எண்ணம் நிச்சயமாக சரியாகத்தான் இருக்கும். அதன்படி தான் நாம் செல்ல வேண்டும்.

எல்லா வகையான உயிர் வர்க்கத்துக்கும் பசி என்னும் உணர்வைப் படைத்து உணவையும் தந்தார் இறைவன். மனிதர்களைத் தவிர்த்துப் பிற உயிரினங்கள் தம் பசியைத் தீர்த்துக்கொள்ள பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலையில் இல்லை.

எம், வாழ்க்கையின் தேவைப் பொருள்களான உணவு முதல் வேறு எந்த ஒரு பொருளையும் பெற வேண்டுமாயின் அதற்கு ஈடாக பணத்தைத் தரவேண்டியிருக்கிறது. பணம் இல்லையாயின் எந்த ஒரு பொருளையும் பெற முடியாது. இதனை மனதில் கொண்டு பார்க்கும் பொழுது மனித வாழ்க்கை என்னும் மாளிகைக்குப் பணம் என்ற படிக்கட்டு அவசியமாக வேண்டும் என்று உணர்ந்து கொள்ள முடிகிறது. எம்முடைய வாழ்க்கை எனும் மாளிகை எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாகவும், பகட்டுடையதாகவும், உறுதியுடையதாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோமோ அதற்கு ஏற்பப் பணம் என்னும் அத்திபாரம் பலமாகப் போட்டிருக்க வேண்டும். நாம் சம்பாதிக்கும் அளவுக்கு ஏற்ப வாழ்க்கை என்னும் மாளிகை உயர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும். நம்முடைய பணத்தின் அளவுக்கு ஏற்ப புகழும் நன்மதிப்பும் சமுதாயத்தில் ஏற்படும்.

ஒரு காரியத்தைத் தொடங்கு முன்னும் தொடங்கியவுடனும் நிறுத்துவதில் நாம் நேரத்தை வீணடிக்கிறோம். தொடங்கியதைத் துணிச்சலுடன் செயற்படுத்த ஆரம்பித்து விட்டால் வெற்றியை அடைவது உறுதி" என்கிறார் வில்லியம் ஹாஸ்லெட்.

மனிதனுக்கு தீவிரமான ஆசை எதில் இருக்கிறதோ, அதில் அவனுடைய ஆ... வம் அதிகம் இருக்கிறது. அதில் ஈடுபடு... தற்கு அவன் காலம் தாழ்த்துவதே இல்லை... எதில் அவனுக்கு ஈடுபாடு இல்லையோ... அதைச் செய்யவே அதிக காலம் செல... கிறான்– என்றார் சிக்மண்ட பிராய்டு. பொ... வாக ஒருவனுடைய மனத்தில் ஆ... கிளம்பாத விடயத்தில் அவன் ஆரம்பிப்ப... இல்லை. அப்படி ஆரம்பித்தாலும் அ... னைத் தொடர்வதும் இல்லை. என்று மனோ... தத்துவ அறிஞர்கள் கூறுகிறார்கள்.

(தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 6 | | | 4 | | | 9 |
| | | | | 3 | | 8 | | |
| 9 | | | | | | | 6 | |
| | | | 6 | | | | | 2 |
| | 8 | | | 7 | | | 3 | |
| 3 | | | | | 5 | | | |
| | 9 | | | | | | | 1 |
| | | 1 | | 9 | | | | |
| 4 | | | 3 | | | 2 | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 2 | 9 | 1 | 4 | 8 | 5 | 3 |
| 9 | 5 | 3 | 8 | 6 | 2 | 7 | 1 | 4 |
| 1 | 8 | 4 | 5 | 3 | 7 | 9 | 6 | 2 |
| 5 | 3 | 9 | 6 | 7 | 8 | 4 | 2 | 1 |
| 4 | 2 | 7 | 1 | 5 | 9 | 6 | 3 | 8 |
| 8 | 1 | 6 | 2 | 4 | 3 | 5 | 9 | 7 |
| 2 | 7 | 5 | 4 | 9 | 1 | 3 | 8 | 6 |
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 3 | 9 | 8 | 7 | 2 | 6 | 1 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஒரே நேரத்தில் இரண்டு படங்கள்



அறுவைச் சிகிச்சை முடிந்து ஓய்வில் இருக்கும் அஜித், மே மாதம் முதல் படப்பிடிப்பில் பங்கேற்கத் திட்டமிட்டுள்ளதாகவும், ஒரே நேரத்தில் இரண்டு படங்களில் பணியாற்றவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"ஆரம்பம்" படப்பிடிப்பின் போது ஏற்பட்ட உடற்காயத்தின் மீது மீண்டும் "வேதாளம்" இறுதிக் கட்டப் படப்பிடிப்பில் காயம் ஏற்பட்டதால், மருத்துவர்களின் அறிவுரையைத் தொடர்ந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார் அஜித். இதனால் தொடர் ஓய்விலிருந்த அஜித் தற்போது ஒரே நேரத்தில் இரண்டு படங்களில் நடிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மே மாதம் ஆரம்பிக்கவுள்ள இந்தப்படங்களில் முதலில் சிறுத்தைச் சிவா இயக்கத்திலும், தொடர்ந்து விஷ்ணுவர்தன் இயக்கத்திலும் நடிக்கவுள்ளார். சிவா இயக்கும் படத்துக்கான கதைத் தெரிவுகள் அனைத்தும் முடிவாகியுள்ள நிலையில் திரைக்கதை அமைக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் சிவா. எனவே சிவா இயக்கும் படத்தை தீபாவளிக்கும், விஷ்ணுவர்தன் படத்தை பொங்கலுக்கும் வெளியிடும் வகையில் தனது பணிகளை முடித்துக் கொடுக்கத் திட்டமிட்டு இருக்கிறாராம் அஜித்.

முன்னதாக சிவா இயக்கத்தில் வீரம், வேதாளம் ஆகிய படங்களிலும், விஷ்ணுவர்தன் இயக்கத்தில் ஆரம்பம் படத்திலும் அஜித் நடித்திருந்தார். இந்தப்படங்கள் வெற்றியீட்டிய நிலையில் மீண்டும் வெற்றிக் கூட்டணியில் அஜித் இணைந்துள்ளதால், தலை இரசிகர்கள் கொண்டாட்டத்தில் உள்ளனர்.

## எப்படித்தட்டினால் காசு விழும்...?

ஒரு பஸ் நிலையத்தில் ஒரு பெண் தன்னுடைய மகனுடன் பதற்றமாக நின்று கொண்டிருந்தாள். பக்கத்தில் உள்ளவர்கள் என்னவென்று கேட்டனர்.
"இவன் காசை விழுங்கிட்டான். என்ன செய்றதுன்னு தெரியலை" என்றாள்.
ஆளாளுக்கு மருத்துவம் சொல்ல ஆரம்பித்தார்கள்.
"நாலுவாழைப் பழத்தை ஊட்டிவிடு. தானா வெளியே வந்துடும்"
"ஆஸ்பத்திரிக்குப் போய் எக்ஸ்ரே எடுத்துப் பார்..."
கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் பையனைத் தூக்கிக்குனிய வைத்து முதுகில் தட்டிக் கொடுத்தார். பையன் விழுங்கிய காசு வெளியே வரவில்லை.
அப்போது இன்னொருவர் வந்தார். பையனைத்தூக்கி, தலைகீழாகப் பிடித்துக் குலுக்கி, ஒரு தட்டுத் தட்டினார். காசு வெளியே வந்து விழுந்தது.
எல்லாரும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அந்தப் பெண் நன்றியுடன் அவரைப் பார்த்தாள்.
"சார் நீங்க வைத்தியரா?"
இல்லை இன்கம்ராக்ஸ் ஒபிஸர். எங்கே, எப்படித் தட்டினால் காசு விழும்னு எனக்குத் தெரியாதா? என்றார்.

படித்ததில் பிடித்தது

வலிக்காமல் குட்டுவது எப்படி என்பது தங்கைகளுக்கு மட்டுமே தெரியும்



அது போல் வலிக்காமல் வலித்தது போல் நடிக்க அண்ணன்களால் மட்டுமே முடியும்....

மெடிசன் படிச்சிட்டு ஏழைகளுக்கு சேவை செய்றேனு சொல்லுரவங்களையும்..




மேரேஜ் முடிச்சிட்டு மாமியாரை கூட இருந்து பார்த்துக்குவேனு சொல்லுரவங்களையும் நம்பவே முடியாது!

சௌமியா
ஒவ்வொரு நாளும் நல்ல குணத்தை வளர்த்து கொள்ள முடியலைனாலும் பரவாயில்லை. உங்ககிட்ட இருக்கும் கெட்ட குணத்தை குறைத்து கொள்ளுங்கள்...

மஹ்ரூம்
உறவுகளில் விரிசல்கள் சகஜமான ஒன்று... அவை பிரிவை நோக்கி செல்வதும், உறவை மேலும் பலப்படுத்துவதும் அன்பின் ஆழத்தை பொறுத்தது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிர்கால நலனைக் கருத்திற் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் சார்ந்த சிரமங்கள் சமயோசித செயலால் விலகும். உபரி வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** உதாசீனமாகப் பேசுபவரிடம் இருந்து விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குளறுபடி சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும். அதே நேரம் ஆடம்பர எண்ணத்தால் செலவு வரம்பு மீறும், கவனம்.

**மிதுனம்:** உறவினர்களுக்கு உதவுவதால், குடும்பத்தில் அதிருப்தி வரலாம். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகம். குடும்பச் செலவுகளுக்கான பணத்தேவை அதிகரிக்கும். மாணவர்களுக்கு போக்குவரத்தில் கவனம் தேவை.

**கடகம்:** வேலைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி அடையும். கொடுக்கல், வாங்கல் முன்னேற்றம் பெறும். குடும்பத்தினர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிங்கம்:** உங்களின் செயலுக்குப் பாராட்டுக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வெகுநாள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுப மங்கல நிகழ்வு உருவாகும்.

**கன்னி:** திட்டமிட்ட பணிநிறைவேற அதிக உழைப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். பணியாளர்கள், சலுகைகளைப் பெற பொறுமை காக்க வேண்டும்.

**துலாம்:** குடும்பச் சூழ்நிலையை உணர்ந்து செலவழியுங்கள். தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும். சேமிப்புப் பணத்தைச் செலவுக்கு எடுக்க வேண்டி வரும். கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் உதவியால் உற்சாகம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் விற்பனை இலக்கு நிறைவேறும். உறவினர் இல்ல சுப நிகழ்வில் கலந்து கொள்வீர்கள். விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள்

**தனுசு:** எவருடனும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சுமாரான பணவரவு கிடைக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை.

**மகரம்:** தாமதமான பணியைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பணவரவு திருப்திகரமான அளவில் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களை உபசரிப்பீர்கள்.

**கும்பம்:** நண்பர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். சேமிப்புப் பணம் அத்தியாவசியச் செலவுகளுக்கு பயன்படும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மீனம்:** உங்கள் செயலில் உண்மை அன்பின் தன்மை பிரதிபலிக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அளவு செழிக்கும். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி ஓங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 600 | 650 | 500 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 350 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 600 | 400 | 600 | 650 | – |
| பாரை | 450 | 500 | 600 | 600 | 600 | 400 | 400 |
| சுறா | 300 | 600 | 600 | – | 700 | 600 | 450 |
| சீலா | 250 | 400 | 500 | 400 | 450 | 300 | 400 |
| விளை | 500 | 500 | 300 | 500 | 500 | 500 | 350 |
| முரல் | 250 | 400 | 400 | 400 | 350 | 300 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 | 400 | 200 | 200 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 350 | – | – |
| ஒரா | 300 | 350 | 300 | – | 300 | 400 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 200 | 300 |
| நகரை | 150 | 300 | – | – | 300 | 150 | 350 |
| சூடை | 130 | 100 | 100 | – | 300 | 150 | – |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 200 | 150 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 300 | 300 | 250 |
| மதனம் | 250 | 250 | 220 | 300 | 250 | 400 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 120 | 100 | – |
| பாலை | 100 | 300 | 300 | 300 | 400 | – | – |
| வாழை | 150 | 150 | – | 300 | 250 | 200 | 200 |




## ஸ்பெசல் வடை

**தேவையானவை:**

துவரம் பருப்பு – 1கப்
கடலைப்பருப்பு அரைக்கப்
உளுத்தம் பருப்பு – அரைக்கப்
பச்சரிசி – 25 கிராம்
முந்திரிப் பருப்பு – 20 கிராம்
துருவிய தேங்காய் – கால்க்கப்
காய்ந்த மிளகாய் – 4
கறிவேப்பிலை – 1 கொத்து
உப்பு – தேவைக்கு
எண்ணெய் – பொரிப்பதற்கு
பெருங்காயத்தூள் – ஒரு சிட்டிகை.


**செய்முறை:**

3 பருப்புகள், அரிசி, முந்திரி, மிளகாய் இவற்றைக் கழுவி 2 மணி நேரம் தண்ணீர் விட்டு ஊற வைக்கவும். ஊறியதும் நீரை வடித்து உப்புச் சேர்த்து கொரகொரப்பாக அரைத்து பெருங்காயத்தூள், கறிவேப்பிலை, தேங்காய்த் துருவல் சேர்த்து வடையாகத் தட்டி எண்ணெயைக் காய வைத்து காய்ந்ததும் பொரித்து எடுக்கவும்.

**குறிப்பு:** வெங்காயத்துக்குப் பதில் முந்திரி, தேங்காய்த் துருவல் சேர்க்கப்பட்டுள்ளது. பண்டிகைகளின் போது படைப்பதற்கு இது ஏற்றது.

**நாளை**
தை-03
ஞாயிற்றுக்கிழமை 17.01.2016
திதி: அட்டமி மா.05.39
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ.01.35
ராகுகாலம்: 05.05-06.35 வரை
சுபநேரம்: 09.35- 11.05 வரை

# ஆடைகளின் கறை நீக்குவதற்கு.......



- ஆடைகளின் மேல் பெர்ப்யூம் பயன்படுத்தும் போது, நிறம், நூல், வேலைப்பாடு என எல்லா அம்சங்களிலும் அது விரைவில் சிதைய வாய்ப்பாகும்.
- துணிகளில் படிந்த கறையை எடுக்க, நெயில்பொலிஷ் அசிட்டோன் எனப்படும் கெமிக்கலை அந்த இடத்தில் சில துளிகள் விட்டு, துணியால் மெதுவாகத் தேய்த்து எடுக்கக் கறை நீங்கி விடும். அல்லது அசிட்டோன் சேர்க்கப்பட்டுள்ள நெயில்பொலிஷ் ரிமூவரையும் இதற்குப் பயன்படுத்தலாம்.
- ஐஸ்கிரீம், பால், சாக்லேட், கிரேவி, லிப்ஸ்டிக் கறையை எடுக்க, துணியை வோஷிங் பவுடர் கரைசலில் ஊறவைத்து, சோப்பை அந்த இடத்தில் மட்டும் கவனம் கொடுத்துத் தேய்த்தால் போதுமானது.
- எண்ணெய்க் கறை படிந்திருப்பின், முகப் பவுடரை மிதமான சூட்டில் உள்ள நீரில் கலக்கி அந்தத் துளிகளைக் கறையில் விட்டு பிரஷ் செய்தால் கறை காணாமற் போய்விடும்.
- குருதி, துரு, சூப், கிரேவி போன்றவை கறையாகப் படிந்திருந்தால், சில துளிகள் ஹைட்ரஜன் பரொக்ஸைடை அதில் விட்டு மெதுவாகத் தேய்த்தால் போய்விடும்.
- ஆடைகளை ஊறவைக்க அதிகளவு டிடர்ஜென்ட் பவுடர் பயன்படுத்தவும் கூடாது, அதிக நேரம் ஊற வைக்கவும் கூடாது. இதனால் எத்தனை முறை அலசினாலும் சோப்பின் கெமிக்கல்ஸ் துணியில் தங்கி விடும். காயவைத்து எடுத்தாலும் வெண்மைக்கோடுகள் இருக்கும். துணிகளை செல்ப்களில் அடுக்கும் போது அடியில் நியூஸ் பேப்பர் வைக்க வேண்டும்.
- எல்லா வகை ஆடைகளையும் உள்பக்கம் வெளியில் தெரியுமாறு உலர்த்தினால் நிறமும் ஆயுளும் பாதுகாக்கப்படும்!



# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 120 | 60 | 60 | 40 | 40 |
| கத்தரி | 150 | 100 | 150–200 | 170 | 120–140 | 120 | 110 | 160 |
| கரட் | 250 | 240 | 160–300 | 180 | 200–300 | 320 | 240 | 280 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40–50 | 60 | 30 | 30 |
| பயிற்றை | 200 | 200 | 160 | 140 | 160 | 140 | 110 | 200 |
| பாகல் | 200 | 200 | 160 | 160 | 140–160 | 300 | 140 | 250 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 70–80 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80–100 | 90 | 55 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 150 | 140 | 120–140 | 140 | 100 | 160 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40–50 | 60 | 40 | 50 |
| தக்காளி | 80 | 80 | 70 | 60 | 50–60 | 60 | 55 | 40–50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60–70 | 30 | 50 | 40 |
| கீரை | 50 | 30 | 40 | 30 | 30–40 | 40 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 50 | 30–40 | 30 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 500 | 300 | 350 | 320 | 300–320 | 600 | 250 | 400 |
| புடோல் | 80 | 120 | 100 | 100 | 80–100 | 120 | 40 | 80 |
| கோவா | 120 | 170 | 160 | 140 | 100–120 | 160 | 55 | 80 |
| வெண்டி | 200 | 120 | 120 | 120 | 120–140 | 120 | – | 120 |
| போஞ்சி | 220 | 240 | 240 | 160 | 200–220 | 260 | – | 200 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 160 | 100–120 | 120 | 110 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40–45 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 70 | 70–80 | 60 | 50 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 | 80–100 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 280 | 300–400 | 230 | 300–340 | 400 | – | 300 |
| இராசவள்ளி | 150 | 120 | 160 | 120 | 160 | 120 | 110 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 02 . 1935 — மறைவு 26 . 01 . 2015



**நாகலிங்கம் கணேசபிள்ளை**

(இணுவில் இந்துக்கல்லூரி - பிரதி அதிபர், ஓய்வுநிலை, இணுவில் இந்துக்கல்வி நம்பிக்கை நிதியத் தலைவர்)

திதி : வளர்பிறை ஸப்தமி

நல்லாசிரியனாய் நல்தலைவனாய்
தந்தையாய் தாரமாய்
பல்லோர் போற்றும் பணிகள் பல புரிந்து
நிறை வாழ்வு கண்டு
உண்மை பேசி உத்தமனாய்
வாழ்ந்து காட்டிய எங்கள் குலதெய்வத்தை
என்றும் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்

குடும்பத்தினர்.
"சத்தியகிரி"
இணுவில் தெற்கு
(மனைவி, மகன், மருமகன்)

(ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1937 . 01 . 18 — உதிர்வு 2015 . 01 . 27



**திருமதி கண்மணி சுந்தரலிங்கம்**

எம் இதயத்தில் நீங்காத எமதருமை அன்னையே !!
என் அன்புப் பாதையில் ஒளியேற்றிய ஒளிச்சுடரே !
எமையெல்லாம் பேணிக்காத்து
சுமைதாங்கியாய் வாழ்ந்த அம்மா
உங்கள் பொன்முகமும் கனிவான பேச்சும்
ஓராண்டு நீங்கினாலும்
நினைவலைகள் என்றும் நிலைத்திருக்கும்

இல.996, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 10.07.1985 — உதிர்வு 27.01.2015

**அமரர் க.சுதாஜினி**

திதி :- (வளர்பிறை அட்டமி)

எங்கள் அன்பின் மகளே ஆசை செல்வமே
நீ சென்று ஓராண்டு ஆனாலும் ஆறாதம்மா எம் துயரம்
உன் உடல் எங்களை விட்டு பிரிந்தாலும்
உனது முத்தான சிரிப்பும்.உள்ளம் கனிந்த பேச்சும்
உன் அழகான தோற்றமும்.அன்பான பார்வையும்,
அரவணைக்கும் கைகளும்.ஓடித் திரிந்த கால்களும்.
எங்கள் மனக் கண்முன் எப்போதும் நிழலாடுதம்மா
எங்களை எல்லாம் இவ்வுலகில் தவிக்கவிட்டு
மிக விரைவாக ஜோதியுடன் கலந்ததேனோ!!!

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் !!

பட்டாணிச்சூர்.
வவுனியா
குடும்பத்தினர்


# காய்ச்சலால் குடும்ப பெண் சாவு

ஒரு நாள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்றிரவு உயிரிழந்தார்.

முல்லைத்தீவு வவுனிக்குளம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த தாஸ் ஜெயந்தினி (வயது-25) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிந்தார்.

நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அந்தப் பெண், பனடோல் போட்டுள்ளார். மறுநாள் மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக அவர் நேற்றுப் பிற்பகல் கிளி நொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றிரவு 7.30 மணியளவில் அவர் உயிரிழந்தார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-4)


## 12ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்



திருமதி.
**லில்லி கிறேஸ் தேவசகாயம்**

அன்பால் அனைவரையும்
அரவணைத்த அன்னையே!
உங்கள் நினைவுகள்
இனிய நாதமாய் என்றும்
எங்களுடன் சங்கமமாகட்டும்

பாசத்துடன்.
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

இல.28. றக்கா ஒழுங்கை .
சுண்டுக்குளி.

மலர்வு 28.10.1924 — உதிர்வு 16.01.2004

## 31ஆம் நாள் நன்றி ஆராதனை



தோற்றம் 13.01.1936 — மறைவு 17.11.2015

**திருமதி அருள்வதி சிற்றம்பலம்**

(முன்னாள் தாதி உத்தியோகத்தர்
மக்-லியோட் வைத்தியசாலை-இணுவில்.
பரி.லூக்கஸ் வைத்தியசாலை-புத்தூர்)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த திருமதி அருள்வதி சிற்றம்பலம் அவர்களின் நல்லடக்க ஆராதனையில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (16.01.2016) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் நன்றி ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

சகோதரி, மைத்துனர்,
பிள்ளைகள், மருமக்கள்.

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.12.2015
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவி
அமரர்
**தனபாக்கியம் சுந்தரம்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு 13.01.2016 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. நாளை (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

292, பிரதான வீதி.
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**மகா கணபதீஸ்வரக் குருக்கள் பாஸ்கரக் குருக்கள்**

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மகா கண பதீஸ்வரக் குருக்கள் பாஸ்கரக் குருக்கள் நேற்று 15.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்


## தொடர்ச்சிகள்...

### கூட்டமைப்பு

வில்லை.

தேசியதைப்பொங்கல்விழாவுக்கான அழைப்பிதழ், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சகலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அரசியல் கைதிகளை விடுவிக்காமல், காணிகளை முழுமையாக மக்களிடம் கையளிக்காமல் இடம்பெறும் இந்தப் பொங்கல் நிகழ்வை புறக்கணிக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பொங்கல் விழாவுக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களான கே.சயந்தன், இ.ஆனோல்ட், அ.பரஞ்சோதி ஆகியோர் மட்டும் கலந்து கொண்டனர். ஏனைய எவரும் பங்கெடுக்கவில்லை.

பலாலி இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பொங்கல் விழாவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் மாவை.சேனாதிராசா பங்கெடுத்திருந்தார். ஆனால் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(து-5-21)

### காலாவதியாகி

சிங்க தெரிவித்தார்.

தேசிய தைப்பொங்கல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இது குறித்துக் கூறுகையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது காலாவதியான சட்டமாகும். அதனை அகற்ற எதிர்பார்த்துள்ளதுடன் சர்வதேச ரீதியில் தற்போது பயங்கரவாதப் பிரச்சினை இருப்பதன் காரணமாகத் தேவைப்பட்டால் அதற்கு தேவையான சட்டங்களை பிரிட்டனில் உள்ள சட்டத்துக்கு அமைவாக எதிர்காலத்தில் நாம் நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

அத்துடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச் சர் சாகல ரத்னாயக்க, நீதியமைச்சர் விஜய தாஸ ராஜபக்ச ஆகியோரிடம் நேற்று (நேற்று முன்தினம்) மாலை பேசினோம். இது தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெரிவித்து பின்னர் எடுக்கப்படும் முடிவு தொடர்பில் அனைவருக்கும் தெரிவிக்கப்படும் - என்றார்.

(து-5)

### பொங்கல்

அதற்கமைய நேற்று முன்தினம் வியாழக்கிழமைமாலையே, யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற் கொண்டிருந்தனர்.

ஆனால் நேற்றுக் காலை திடீரென, ஜனாதிபதி மைத்திரிபால நிகழ்வுகளில் பங்கெடுக்க வருகைதரமாட்டார் என்று அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி வருகை தராமைக்கான உத்தியோகபூர்வக் காரணம் தெரியப்படுத்தப் படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையின் போது, ஜனாதிபதி தன்னால் இந்த நிகழ்வில் பங்கெடுக்க முடியாமைக்கு வருந்துவதாகத் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் என்று சொல்லிக்கொள்ளும்ஒருவரால், யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட ஊடகச் சந்திப்பில், ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணத்தின்போது அவரைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-5-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### அந்தோனிச்சாமி சந்திராதேவி

ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எமது துயர்

பிறப்பு:
24.05.1962

இறப்பு:
16.01.2015

அன்னாரின் நினைவாக இன்று (16.01.2016) சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் பங்கேற்குமாறு அழைக்கின்றோம்.

486, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தேவமதுரம் இலட்சுமியம்மா



கம்பர்மலை வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகவும் ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவமதுரம் இலட்சுமியம்மா (ஓய்வு பெற்ற பிரதம தாதி உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை) நேற்று (15.01. 2016) வெள்ளிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் முருகேசு தேவமதுரம்
(அகில இலங்கை சமாதான நீதிவான்
Kings வைத்திய நிலையம் -குருநகர்)
021 222 8511,077 3399072

இல. 31, ஸ்ரான்லிக் கல்லூரி முன்வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

### நாகநாதர் சிவகுரு நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ். 'கோண்டாவில் சி.சி. தமிழ் கலவன் பாடசாலை)



குமரகோட்டம் கோண்டாவிலைப் பிறப் பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட நாக நாதர் சிவகுரு நடராசா நேற்று (15.01.2016) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கு.குலத்துங்கசேகரம்
(மருமகன்) 077 444 44 38,
021 205 3602

குமரகோட்டம்,
கோண்டாவில்.

### பொன்னம்பலம் இராசமணி



மீசாலைமேற்கைப் பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட பொன் னம்பலம் இராசமணி 13.01. 2016 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான பொன்னம்பலம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சின்னையா - சிவ காமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கனரத்தினம், செல்வரத் தினம், அன்னலட்சுமி, கமலாதேவி காலஞ்சென்ற முத்துராஜன் ஆகியோ ரின் அன்புச்சகோதரனும் இரகுநாதன், றஜிதா, மேனகா (லண்டன்), பிரதீபன் (லண்டன்), கபிலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லிசீந்திரன் (கண்ணன்), குணதீபன்(தீபன் - லண்டன்) ஆகியோ ரின் அன்பு மாமனாரும் ஜானுயா, நிதுர்சியா, லதுர்சி (லண்டன்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.14, நாயன்மார் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை 13.01.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கி யத்தின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, தனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் மகாலிங்கம், யோகேஸ்வரி, நாகசோ திலிங்கம், இராஜேஸ்வரி (சுவிஸ்), நகுலேஸ்வரி, சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராஜா, குலசிங் கம், சகுந்தலாதேவி, மகேஸ்வரி, பவானி (இந்தியா), குலேந்திரன்(சுவிஸ்), பாலசுப்பிரமணியம், மதிஜீவன் ஆகியோரின் மாமனாரும்ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.01.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(67659)
(11,15)

தொடர்பு:- 024 568 8149

### பெருமையினார் வைத்தியநாதன் (ஓவசியர்)



யாழ்/ நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.212, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பெருமையினார் வைத்திய நாதன்(முன்னாள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோத்தர்) 15.01.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமையினார் - கற்பகம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு நாகமுத்து தம்பதியயரின் பாசமிகு மருமகனும் பார்வதிப் பிள்ளையின் அன்புக் கணவரும் தவநாதன் (வடமாகாண சபை உறுப்பினர்), குலநாதன் (டென்மார்க்), சந்திரமதி (டென்மார்க்), சிவநாதன்(அமரர் தூயமணி), தயாமதி, யோகநாதன், கமலநாதன் (நயினை நாகம்மன் வாணிபம் - திருநகர்), விமல நாதன்(வவுனியா), கோபிநாதன்(மாவட்ட செயலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரூபாவதி(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - ஆசிரி யர்), யசோதா(டென்மார்க்), இளங்குமரன் (டென்மார்க்), சிறீதரன்(பிரதேச செயலகம் - கரைச்சி), பகிதா (திருநகர்), ரஞ்சினி (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது வட்டக்கச்சி இல்லத்தில் நடை பெற்று தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு: 021 568 1482,
தவநாதன் - 077 345 1420

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

தோற்றம்
30 . 03 . 1930



மறைவு
01 . 01 . 2016

கடந்த 01.01.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னப்பு சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற PHI, JP)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.01.2016) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். மறுநாள் 17.01. 2016 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு மதிய போசன நிகழ்வுகள் சூரியா மண்டபத்தில் (369, பருத்தித் துறை வீதி, நல்லூர்) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங் கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக் கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

41(15), பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 076 8944 318

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12 . 06 . 1932



மறைவு
17 . 12 . 2015

### அமரர் நன்னி பொன்னன்

17.12.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன் புத் தந்தையார் அமரர் நன்னி பொன்னன் அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று (16.01.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங் கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு, இராஜபுரி. குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
05 . 05 . 1954



மறைவு
16 . 01 . 2011

அமரர்
### அந்தோனிவேதநாயகம்

யா/போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவு (EU )

"இறப்பும் உயிர்ப்பும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

குடும்பத்தினர்.

## போர்க்குற்றப்

மாகாணம் அதன் அவலங்களிலும் ஆற்றாமைகளிலும் இருந்து இன்னும் மீளவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை, தனியார் காணிகளும் மக்கள் நலன் சார்ந்த கட்டடங்களும் விடுவிக்கப்படவில்லை, காணாமற்போனோர் விவரங்களை அவர்களின் சுற்றத்தார் இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். முன்னாள் போராளிகள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இன்னமும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவில்லை, மாகாணத்தின் அலுவல்களில் மத்திய அரசின் தலையீடு குறைந்தபாடில்லை, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் வழங்கப்படவில்லை, மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை, விதவைகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படவில்லை. இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவல நிலையைப் பட்டியல் இட்டுக் கூறிக் கொண்டே போக முடியும்.

**ஜனநாயக சூழல் மலர்ந்திருக்கிறது**

எம்மால் பதவிக்குக் கொண்டு வரப்பட்ட இந்த அரசு ஜனநாயக சூழலை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. எனினும் மூன்று விடயங்கள் இன்று மிக முக்கிய நிலையைப் பெற்றுள்ளன. ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் மாற்றம் ஏற்படுத்தல், தமிழ் மக்களின் பிரச்சினையை ஐ.நா. உரிமை சாசனங்களின் அடிப்படையில் நிரந்தரமாகத் தீர்த்து வைத்தல், போர்க் குற்ற விசாரணைகளை 2015 செப்ரெம்பர் மாத ஐ.நா. இணைந்த பிரேரணையின் அடிப்படையில் முறையாக செயற்படுத்தி நீதியைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன வையே அவை.

இவற்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவது எமக்குத் தெரிந்ததே. ஆனால் எவ்வாறான அரசியல் மாற்றம் நடைபெறும், எவ்வாறான தீர்வு எமக்குக் கிடைக்கும், போர்க் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவார்களா என்பதில் எமக்கு மயக்கநிலையே இருந்து வருகின்றது.

**மனமாற்றம் அவசியம்**

தென்னாபிரிக்காவில் இவ்வாறான பிரச்சனைகள் தீர்க்க வேண்டியிருந்த போது அவற்றை அரசியல் ரீதியாகத் தீர்த்து விட்டே 'உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை' அமைத்தார்கள். இங்கு 67 வருடகால பிரச்சனைகள் தொடர்ந்திருக்கும் போதே இவ்வாறான நல்லிணக்க நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம். மக்களின் மனமாற்றம் அவசியம் என்பதை நாங்கள் உணர்கின்றோம். ஆனால் உண்மையில் எமது மக்களில் பெரும்பான்மையினர் தைப்பொங்கல் நாளில் விழாக் கொண்டாடும் மனோநிலையில் இல்லை என்பதே யதார்த்தம்.

**மக்கள் மனநிலையை கொழும்பிலிருந்து உணர முடியாது**

எடுக்கக் கூடிய பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்கள் எடுக்காது இருப்பதால் இந்த மனோநிலைக்குள் நாங்கள் அமிழ்ந்து உழன்று கொண்டிருக்கின்றோம். அவற்றை எடுக்க எமது மத்திய அரசு முன்வர வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நிலையை கொழும்பில் இருந்து உணர முடியாது. என்னைப் போல் கொழும்பில் பிறந்து வாழ்ந்து விட்டு இங்கு வந்து சாதாரண மக்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் போது தான் அவர்களின் அவலங்கள், ஆற்றாமைகள், சிந்தனைகள், சினங்கள் யாவையும் புரிந்தன.

**நான் தீவிரவாதியல்ல**

என்னை என் கட்சியின் ஒரு பகுதியினரும், ஊடகங்களூடாக மூளைச் சலவை செய்யப்பட்டுள்ள வட - தென்னிலங்கையின் ஒரு பகுதியினரும், ஒரு தீவிர போக்குடையவர் என்கின்றார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் தீவிரவாதியல்ல. எம் மக்களின் மனோநிலையைப் பிரதிபலிக்கும் ஒருவன் நான்.

தேர்தல் காலங்களில்தான் 2013 ஆம் ஆண்டில் எனது வழக்குக் கோப்பு எனக்குத் தரப்பட்டது. அதுதான் எமது தேர்தல் அறிக்கை. அதன் அடிப்படையில்தான் நான் என் வழக்கைக் கொண்டு நடத்திக் கொண்டிருக்கின்றேன். எமது மக்களின் மனோ நிலையைப் பிரதிபலிக்கும் வண்ணம், எமது 2013 ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கை முன்னெடுக்கும் வண்ணம் எனது நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. தேர்தலில் ஒன்றைக் கூறி நடைமுறையில் இன்னொன்றிற்கு உடன்படுவதாக இருந்தால் நாங்கள் மக்களின் புதியதொரு ஆணையைப் பெறவேண்டும். அவ்வாறு பெறாதவிடத்து என்னை ஆற்றுப்படுத்திய அந்த ஆவணத்தின் அடிப்படையிலேயே எனது நடவடிக்கைகளைக் கொண்டு போக வேண்டும். அதையே நான் செய்து கொண்டும் வருகின்றேன்.

**சிங்கள மக்களின் விரோதியல்ல**

எனக்குச் சிங்கள மக்களுடன் எந்தவித எதிர்ப்போ கோபமோ இல்லை. ஆனால் தமிழ் மக்களின அடிப்படை உரித்துக்களை, அவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்ய அரசியல்வாதிகள் முன்வராவிட்டால் அதனைச் சுட்டிக் காட்டாது என்னால் இருக்க முடியாது. 67 வருடங்களாக நாங்கள் எமது மக்களின் உரிமைகளை புறக்கணித்து வந்துள்ளோம். பேச்சு, உடன்படிக்கைகளில் தருவதாகக் கூறியவை எவையும் இன்னமுந் தந்தபாடில்லை. தந்திருந்தாலும் அவை நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

எனினும் எமது மத ரீதியான ஐக்கியமும் ஒன்றிணைப்பும் மேன்மேலும் நடைமுறைப்படுத்தப் பட்டுவர நான் வாழ்த்துகின்றேன். அதே நேரத்தில் எமது மக்களின் ஆழ வேரூன்றியிருக்கும் பிரச்சனைகளை உரிமைகளின் அடிப்படையில் தீர்க்க யாவரும் முன்வர வேண்டும் - என்றார்.

(த-5-21)

## காணிகளை

வழங்கியுள்ளார்.

ஆனால் எவ்வளவு காலத்தினுள் இந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் பிரதமர் இதன்போது தெரிவிக்கவில்லை.

வலி.வடக்கு காணி விடுவிப்புத் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் கலந்துரையாடல், பலாலி இராணுவத் தலைமையகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி மைத்திரிபால பங்கெடுப்பதாக முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் அவர் வருகை தராத காரணத்தால் குறித்த கலந்துரையாடலில் அவர் பங்கெடுக்கவில்லை.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் இராணுவத் தளபதி உரையாற்றினார். இதன் பின்னர் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி, கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையில் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டதை ஒளிப்படங்களின் ஊடாக விளங்கப்படுத்தினார். இதன் பின்னர், வல்லை - அராலி வீதியில் இராணுவத்தின் வசம் உள்ள 4 கிலோ மீற்றர் நீளமான பாதை விடுவிப்புத் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதற்கு இராணுவத்தினர், குறித்த பாதை விமான நிலையத்துக்கு அண்மையாகச் செல்வதனால், அதனை விடுவிப்பதில் பாதுகாப்பு சிக்கல் இருப்பதாகத் தெரிவித்தனர்.

பிரதமர் ரணில் கருத்துத் தெரிவிக்கையில், பலாலி விமான நிலையம் சிவில் விமான நிலையமாகவே இயங்கப் போகின்றது. அதனால் பாதுகாப்புப் பிரச்சினையில்லை. பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றின் அபிவிருத்திக்கு எவ்வளவு காணிகள் தேவை என்பதை அடையாளப்படுத்துமாறு மீள்குடியேற்ற அமைச்சருக்குப் பணிப்புரை விடுத்தார் பிரதமர்.

இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்கு ஆகக்குறைந்த தேவையான காணி எவ்வளவு என்பதை விரைவில் தெரியப்படுத்துமாறும், மக்களின் காணிகள் மக்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்பதையும் இதன் போது பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மயிலிட்டித் துறைமுகம் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கடற்படையினர், இதற்குப் பதிலாக வளலாய் அல்லது பருத்தித்துறையில் துறைமுகம் அமைக்கலாம் என்ற யோசனையை முன்வைத்தனர். இதன் போது யாழ்.மாவட்ட அரச அதிபர், மயிலிட்டி மக்கள் தமது துறைமுகம் வேறு இடங்களில் அமைவதை விரும்பவில்லை. மயிலிட்டியிலேயே அமைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் இறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனாலும், தனியார் காணிகள் மீளக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. (த-5)

## எங்கள்

வரையில் பங்கு கொண்டனர்.

வசாவிளான் சந்தியில் அமைந்துள்ளபடையினரின் காவலரணில் வைத்து அவர்கள் கொண்டு வந்த உடைமைகள் கடுமையாகச் சோதனையிடப்பட்டன. அதன் பின்னர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் உடல் சோதனையும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆலய வளாகத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். இதன் போது அங்கு குழுமியிருந்த மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு பிரதமரைப் பார்த்து உரக்க கோம் எழுப்பினர். இதன்போது பிரதமர் எந்தப் பதிலும் வழங்கவில்லை. பிரதமர் அங்கிருந்து சென்ற பின்னர், அங்குள்ள மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

(த-5-21)

## காணாமற்போனோர்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போனோர் விவகாரம் வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இருக்கின்றது. காணாமற்போனவர்களில் பெரும்பாலானோரை உயிரிழந்துபோனவர்களாகவே கருதவேண்டியுள்ளது.

மேலும், போர்க் காலத்தில் குற்றமிழைத்த இராணுவத்தினர் - தமிழீழ விடுதலைப் புலிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். நாம் ஜப்பான், தென்னாபிரிக்க நாடுகளுடன் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாகப் பேசி வருகின்றோம்.

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றியுள்ளோம். இங்கு வெளிப்படைத் தன்மையுடன் 225 பேரும் செயற்படவேண்டும். தோல்வியடைந்தவர்கள் இந்த வெளிப்படைத் தன்மையைப் பார்த்து குளறத் தொடங்கியுள்ளனர். ஜி.எல்.பீரிஸ், சர்வாதிகாரமாக 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வந்ததைப் போன்று நாம் செயற்பட மாட்டோம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். சர்வாதிகாரமற்ற முறையிலேயே எமது அரசமைப்பு அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

வடக்கு - தெற்கு ஊடகங்களும் மாறவேண்டும். தற்போது உள்ள நிலைமையைக் குழப்பும் வகையில் செயற்படக் கூடாது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கிய தலைவர்களுள் இப்போது இருப்பது நான் மட்டும்தான். இந்த நாட்டில் ஸ்திரத்தன்மை - அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்திய பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்குவது எனக்கு பெரியவிடயமல்ல - என்றார் அவர்.

இலங்கையில் காணாமற்போனவர்கள் குறித்து உரிய விசாரணைகளை நடத்தி உண்மையைக் கண்டறியுமாறு காணாமற்போனோரின் உறவினர்களும், சர்வதேச சமூகமும் தொடர்ச்சியாகக் கோரிவரும் நிலையில் பிரதமர் ரணில் இவ்வாறு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## உதயனுக்கு

பாதுகாப்புப் பிரிவினர் செய்தி சேகரிப்புக்கு அனுமதி மறுத்தனர்.

தேசிய தைப்பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்றது. இதன் ஓர் அங்கமாக, உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு நேற்றுக் காலை இடம் பெற்றது. இது தொடர்பான செய்தி சேகரிப்புக்கு 'உதயன்' ஊடகவியலாளர்கள் சென்றிருந்தனர்.

வசாவிளான் சந்தியில் அமைந்துள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் மறிக்கப்பட்டுச் சோதனை நடவடிக்கைகளின் பின்னரே சகலரும் அனுமதிக்கப்பட்டனர். ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தமக்கு இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனினால் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் உள்ள ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதித்தனர். ஏனையோருக்கு அனுமதியில்லை என்று தெரிவித்தனர்.

இதன்போது, தகவல் திணைக்களத்தின் ஊடாகச் செய்தி சேகரிப்புக்கு ஏற்கனவே ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு அனுமதிக்கு விண்ணப்பிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் பிரதமர் பாதுகாப்புப் பிரிவுக்கு விண்ணப்பிக்கப்பட்டதும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் அதனை ஏற்கவில்லை. பிரதமரின் ஊடகப் பிரிவு அதிகாரி சம்பவ இடத்துக்கு வந்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்கு விளங்கப்படுத்திய பின்னர் உட்செல்ல அனுமதிப்பதாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

பிரதமரின் ஊடகப் பிரிவு அதிகாரி அங்கிருந்து சென்றதும், இராஜாங்க அமைச்சரின் பெயர்ப் பட்டியலில் உள்ளவர்கள் மட்டுமே உள்ளே செல்லலாம் என்று ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சரினால் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் சிங்கள ஊடகவியலாளர்களின் பெயர்கள், முன்னர் ஊடகத்துறையில் இருந்து தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ள ஊடகவியலாளர்களின் பெயர்கள் என்பனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வு தொடர்பான செய்தி சேகரிப்புக்கு மாத்திரம் 'உதயனுக்கு' பின்னர் அனுமதிவழங்கப்பட்டது.

(த-5-21)

## ஆட்சி மாறிய

கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தைத் திருநாளன்று விருந்தினராக அழைக்கப்பட்டமை எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. பிரிட்டனிலும், உலகின் ஏனைய பகுதிகளில் வாழும் இந்துக்கள் குளிர் காலம் முடிந்தபிறகு இதைக் கொண்டாடுவதை நான் அறிவேன். வசந்த காலத்தையும், சூரியனையும் வரவேற்பதோடு, வருடம் முழுவதும் சமாதானமும் சுபீட்சமும் மலர வேண்டும் என்பதற்காகவே கொண்டாடப்படுகின்றது.

தமிழர்கள் இதனைத் தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்கு பின் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த முதல் வெளிநாட்டு அமைச்சர் நான் தான். தற்போது குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காணக் கூடியதாகவுள்ளது. மீள் குடியமர்வுகளும், மீள் கட்டுமாணங்களும் இடம் பெறுகின்றன. மிதிவெடி அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள பிரிட்டன் நிதி உதவி வழங்கியுள்ளது. மீளக்குடியமர்ந்த மக்களைச் சந்தித்தேன். அவர்கள் தங்கள் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதை நேரில் கண்டேன். மக்கள் சுதந்திரமாக வாழ்வதையம் ஊடகங்கள் சுதந்திரமாக இருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. நல்லிணக்க சமாதான முயற்சிகளில் பிரிட்டன் தனது முழு ஆதரவையும் வழங்கும்.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றுக்குப் பிரிட்டன் தனது பூரண ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கும். மற்றைய தைப் பொங்கலைப் போன்று இருக்காமல் இந்த பொங்கல் தமிழ் மக்களுக்கு விசேடமாக அமையட்டும். ஆரோக்கியமான மாற்றங்களுக்கு பிரிட்டன் தன்னால் முடிந்த உதவியைச் செய்யும். இலங்கை நாட்டில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் வாழ்த்துகள் உரித்தாகட்டும் - என்றார்.

(த-5-21-ரி4)

## மைத்திரியுடன்

தைப்பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வில் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டபோதும், அவர் நேற்றுப் பங்கெடுக்கவில்லை. இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பாரியார் மைத்திரியை யாழ்ப்பாணத்துக்கு நேற்று அழைத்து வந்திருந்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் நான்கு தடவைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற போதும், முதல் தடவையாக நேற்றே தனது பாரியாரை அழைத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


(த-5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ரி-20 ஆட்டத்தில் வீழ்ந்தது நியூசிலாந்து

நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி-20 ஆட்டத்தில் 16 ஓட்டங்களால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கு ஆரம்ப வீரரான கபீஸ், 61 ஓட்டங்கள் குவித்து சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்தர். செசாட், ஏமாற்றினார். மத்திய வரிசையில் மலிக், மக்சூட் அப்ரிடி மூவரும் சுமாரான பெறுபேறை வழங்கினர். அப்ரிடி 8 பந்துகளில் 2 சிக்சர்கள் அடங்கலாக 23 ஓட்டங்கள் குவித்தார். முடிவில் பாகிஸ்தான் 8 இலக்குகள் இழப்புக்கு 171 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கபீஸ் 61 ஓட்டங்களையும், உமார் அக்மல் 24 ஓட்டங்களையும்,



அப்ரிடி 23 ஓட்டங்களையும் குவித் தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக மில்னி 4 இலக் குகளையும் சான்நெர் 2 இலக்குகளையும் ஹென்றி, போல்ட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 172 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கியது நியூசிலாந்து. முதல் பந்துப்பரிமாற்றம் ஆமிரிடம். அற்புதமாக வீசினார். இரண்டு ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் குப்தில். இலங்கையை மிரட்டியது போல் பாகிஸ்தானையும் மிரட்டினார் முன்றோ. வில்லியம்சன், முன்றோ இருவரும் அரைச்சதம் கடந்து முறையே 70 ஓட்டங்களுடனும், 56 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மத்தியவரிசை வீரர்கள் எவரும் பத்து ஓட்டங்களை முழுமையாக எட்டவில்லை. முடிவில் 155 ஓட்டங்களில் சுருண்டது நியூசிலாந்து. சகலதுறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட அப்ரிடி ஆட்டநாயகனானார். (ம)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்.சதுரங்க முற்றம் நடத்திய மிதவேக சதுரங்கத் தொடரில் வெற்றிபெற்ற வீரவீராங்கனைகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பபாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# கலைமதி இறுதியில்

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதிய இந்த ஆட்டத்தில், நவிண்டில் கலைமதி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

# ஞானமுருகன், விக்னேஸ்வரா அணிகளுக்கு வெற்றி
## எவ்.ஏ. தொடரில் சரஸ்வதி, சென்.மைக்கல் வீழ்ந்தன



யாழ்ப்பாணம், ஜன. 16

எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ். லீக்குகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன், புத்தூர் விக்னேஸ்வரா அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரில் அரியாலையில் அமைத்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சென்.மைக்கல் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதிக்கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை நீடித்துச் சென்றது. இதில் புத்தூர் விக்னேஸ்வரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# அரைச்சதம் இல்லாத இன்னிங்ஸ்; மீண்டும் தெ.ஆபிரிக்கா தடுமாற்றம்

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்றுமுன்தினம் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா நாள் முடிவில் 267-7 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக எல்கர் மற்றும் ஸ்ரியான் வான் சில். 21 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது ஸ்ரியானின் இன்னிங்ஸ். அம்லா-எல்கர் இணை மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்கள் வரை அணியைக் கொண்டு சென்றது. தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கை 117ஆக இருந்தபொழுது 4 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் எல்கர். நிதானத்தைக்கைவிட்டு பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் வில்லியர்ஸ். சிக்சர் ஒன்றும் வில்லியர்ஸிடமிருந்து சீறிப்பாய்ந்தது. 40 ஓட்டங்களுடன் அம்லாவை வீழ்த்தினார் பின். அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் வில்லியர்ஸும் ஆட்டமிழந்தார். மத்திய வரிசை வீரர்கள் பெரிதளவில் சிறப்பாகச் செயற்படவில்லை. அதற்காக மோசமான பெறுபேறு என்றும் சொல்லிவிட முடியாது. பவுமா 23 ஓட்டங்கள்,விலாஸ் 26 ஓட்டங்கள் என அனைவரும் 20 தொடக்கம் 30 வரையான ஓட்டங்களுக்குள்ளேயே பெற்றனர். ஒருவர் தானும் அரைச்சதத்தை நிறைவுசெய்யவில்லை. நாள் முடிவில் தென்னாபிரிக்கா 267-7 என்ற நிலையில் உள்ளது. மொறிஸ் 26 ஓட்டங்களுடனும், ரபாடா 20 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக பின், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா இரு இலக்குகளையும் மொயின் அலி, புரோட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 16

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து சுப்பர்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம்வகிக்கும்விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று சனிக்கிழமை அரியாலையில் அமைத்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கலையொலி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடர்கள் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் காலை 7 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து யாழ்.இந்துமகளிர் அணி மோதவுள்ளது. மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மல்லாவி அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

# இரண்டாவது ஆட்டத்திலும் ஆஸி. வெற்றி நெருக்கடியான நிலையில் இந்திய அணி

இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா 2:0 என்று முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். வழக்கம்போல் தடுமாறினார் தவான். கச்சிதமான இன்னிங்ஸை கட்டமைத்தார் ரோகித் சர்மா. ரோகித் – கோக்லி இணை மீண்டும் மிரட்ட ஆரம்பித்தது. மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது இந்தியா. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். மீண்டும் சதம் கடந்தார் ரோகித். ரண்அவுட் ஆனார் கோக்லி. கோக்லியின் இடத்தை சிறப்பாக நிவர்த்தி செய்தார் ரகானே. பின்வரிசை வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தாலும் ஆஸியின் ஆடுகளத்தில் தன்னாலும் முடியும் என்பதை ரகானே நிரூபித்தார். அவர் 89 ஓட்டங்களைக் குவிக்க, முடிவில் இந்தியா 308–8. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக பல்க்னெர் 2 இலக்குகளையும் பரிஸ், கஸ்ரிங்ஸ், போலன்ட் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

முதலாவது ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அதே இலக்கு. அதே சராசரியில் சென்றால் மீண்டும் இந்தியாவை வீழ்த்திவிட முடியம். ஆரம்ப வீரர்களான பின்ஞ் – மார்ஷ் இணை இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது. சொல்லிவைத்தாற்போல் இருவரும் தலா 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அஸ்வினின் பந்துவீச்சு நேற்றும் எடுபடவில்லை. சிமித், பெய்லி இணை நேற்றும் நம்பிக்கை கொடுத்தது. சிமித்தை 46 ஓட்டங்களுடன் போல்ட் ஆக்கினார் யாதேவ். அரைச்சதம் கடந்து தொடர்ந்தும் நம்பிக்கை கொடுத்தார் பெய்லி. மக்ஸ்வெல்லும் சிறந்த பங்களிப்பை வழங்க 7 இலக்குகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது



ஆஸ்திரேலியா. இந்தியா தோல்வியடைந்தாலும் சதம் விளாசிய ரோகித் சர்மா ஆட்டநாயகன் விருதை வென்றார்.

முதல் இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்ததால், தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் இறுதி மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாய நிலைமை இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ளது.

(ம)

# பங்களாதேஷ் போராடி வெற்றி



சிம்பாப்வே–பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட ரி–20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 7 இலக்குகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மசகட்சா 79 ஓட்டங்களையும், சிபன்டா 46 ஓட்டங்களையும், வோலர் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக ரகுமான், அல் ஹூசைன் இருவரும் தலா இரு இலக்குகளையும், சகிப் அல் கசன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 164 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 18.4 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ரகுமான் 46 ஓட்டங்களையும், ரமீம் இக்பால் 29 ஓட்டங்களையும், ரகிம் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக கிரீமர் 2 இலக்குகளையும், மசகட்சா, ஜோங்வி, வில்லியம்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். சிம்பாப்வே தோல்வியடைந்தாலும் 79 ஓட்டங்களை விளாசி, ஓர் இலக்கையும் வீழ்த்திய மசகட்சா ஆட்டநாயகனானார். (ம)

# அக்மல் மீதான தடை தற்காலிகமாக நீக்கம்



பாகிஸ்தான் அணியின் வீரரான உமர் அக்மல் உள்ளூர் ஆட்டம் ஒன்றில் விளையாடுகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிமுறைக்கு மாறாக, உடையில் இலச்சினையை அணிந்து இருந்ததால் அவருக்கு ஓர் ஆட்டத்தில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை கடந்த வாரம் தடை விதித்தது.

இதனால் ஆக்லாந்தில் நேற்று நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ரி–20 ஆட்டத்தில் உமர் அக்மல் இடம்பெறமாட்டார் என்று கூறப்பட்டது. இந்த நிலையில் தனக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து உமர் அக்மல் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் முறையிட்டார். இதையடுத்து அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இதனால் நேற்றைய ஆட்டத்தில் அக்மல் களமிறங்கினார். அக்மலுக்கு தடை விதிக்காமல் எச்சரிக்கை செய்து விடுவிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முடிவெடுத்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

(ம)

Personal Class
இரசாயனவியல்
சி.அங்கதன் B.Sc (Chem.sp)
35 வருட வினாத்தாள்
கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 618 9610

A/L Personal Class
Biology, Chemistry
Theory & 37 வருட Past Papers
கற்பிக்கப்படும்
T.P.No: 076 654 1292

மொழி வகுப்புக்கள்
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் -Deutsch, நெதர்லாந்து-Deutsch, ஆங்கிலம், French, Italian வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
விவேகானந்தா அக்கடமி
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 24 64

# நியூசிலாந்துத் தொடர் அவமானமானது என்கிறார் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ்



நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி, அந்தத் தொடரில் ஓர் ஆட்டத்தைத் தவிர அனைத்து ஆட்டங்களிலும் தோல்வியடைந்ததோடு, களத்துக்கு வெளியேயும் பிரச்சினைகளை எதிர்கொண்டதாதகக் கூறப்படும் நிலையில், நியூசிலாந்துத் தொடரை 'மனதைத் தாக்கக்கூடியதும் அவமானமானதுமான தொடர்' என, இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 0–2 என்ற கணக்கில் இழந்த இலங்கை, 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை 1–3 என்ற கணக்கில் இழந்ததோடு, ரி–20 தொடரையும் 0–2 என்ற கணக்கில் இழந்திருந்தது. தவிர, மதுபானத்துடன் கூடிய களியாட்டங்களில் இரவிரவாக வீரர்கள் பங்குபற்றியதாகவும், அணிக்குள் ஒற்றுமைக்குலைவு காணப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. இது தொடர்பில் விசாரணை செய்யுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி தெரிவித்திருந்தார். இவற்றையெல்லாம் வைத்து தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள மத்தியூஸ் நியூசிலாந்துக்கு எதிரான தொடர் அவமானமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் – தொடர், மனதைத் தாக்குவதாகவும் அவமானமானதாகவும் அமைந்திருந்தது. எதிர்பார்ப்புக்கு ஏற்ப திறமையை நாங்கள் வெளிப்படுத்தவில்லை. பயிற்சிகள், திட்டமிடுதல் ஆகியன உட்பட, செய்யக்கூடிய அனைத்தையும் சிறப்பாகவே செய்திருந்தோம். ரி–20 தொடரில் சிறந்த அணியான நாங்கள், எங்களது தரப்படுத்தலைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பினோம். ஆனால், அதைச் செய்யத் தவறிவிட்டோம். அது குறித்து நாங்கள் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளோம்' எனத் தெரிவித்தார்.

# உலகசாதனை படைத்த சானியா–கிங்கிஸ் இணை



சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள சானியா–கிங்கிஸ் இணை தொடர்ச்சியாக 29 ஆட்டங்களில் வெற்றிபெற்று உலகசாதனை படைத்துள்ளது.

இரட்டையர் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் சானியா – கிங்கிஸ் இணை, நடைபெற்று வரும் சிட்னி ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் ஆஸ்திரேலியாவின் அனஸ்தாசியா ரோடினோவா – அரினா ரோடினோவா இணையையும், காலிறுதியில் சென் லியாங் – சுவாய் பெங் இணையையும் வென்றது. இதன் மூலம் தொடர்ச்சியாக 28 ஆட்டங்களில் இந்த இணை வெற்றி பெற்றது. இதன்மூலம், அதிக ஆட்டங்களில் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற கிகி பெர்னாண்டஸ் – சுவரேவா இணையின் சாதனையை 22 ஆண்டுகளுக்குப்பிறகு சமன் செய்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியில் சானியா – கிங்கிஸ் இணை, ரோமானியாவின் ரலுகா – கஜகஸ்தானின் யாரோஸ்லவா இணையை 4–6, 6–3, 10–8 என்ற செற் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. இது அவர்களுக்கு 29ஆவது தொடர்ச்சியான வெற்றியாகும். இதன் மூலம், அதிக ஆட்டங்களில் தொடர்ச்சியாக வெற்றிபெற்ற இணை என்ற சாதனையை சானியா–கிங்கிஸ் இணை நிலை நாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.